

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | அக். 06, 2011 | புரட்சி 10 | முழக்கம் 38 | விலை: ரூ.2.50


## கழகம் நடத்திய தொடர் கூட்டங்களில் வலியுறுத்தல்

## ‘இந்திய தேசியம்’ தமிழர்களுக்கு நீதி வழங்காது

# 3 தமிழர் உயிர் காக்க தமிழக அமைச்சரவை முடிவெடுக்கட்டும்!





இந்தியா - தமிழர்களின் உணர்வுகளை, உரிமைகளை ஒருபோதும் மதிக்காது. ஈழத் தமிழர்களின் இனப் படுகொலைகளுக்கு துணை நின்ற இந்திய ஆட்சி, இப்போது மூன்று தமிழர்களையும் தூக்கிலிடத் துடிக்கிறது. தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மதித்து, காங்கிரஸ் தலைமையில் நடக்கும் இந்திய ஆட்சி, தனது முடிவை ஒருபோதும் மாற்றிக் கொள்ளப் போவதில்லை. எனவே தமிழர்களாகிய நமது இறையாண்மையை நாமே தான் முடிவு செய்தாக வேண்டும்.தமிழக அமைச்சரவைக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, அமைச்சரவை தூக்குத் தண்டனையை ரத்து செய்து ஆளுநருக்கு பரிந்துரைக்க வேண்டும்; அமைச்சரவையின் முடிவை ஆளுநர் ஏற்றுத்தான் தீர வேண்டும்; குடியரசுத் தலைவர் ஆனாலும், ஆளுநர் ஆனாலும், அமைச்சரவைக்கு உட்பட்டவர்கள்தான் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஜோலார் பேட்டையில் நடந்த மரண தண்டனை ஒழிப்புத் தொடர் கூட்டங்களின் நிறைவு நிகழ்ச்சியில் தமிழக அரசை வலியுறுத்தினார்.

நிகழ்வில் பங்கேற்றுப் பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் பேசுகையில்: “3 தமிழர்களை தூக்கில் போட ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். ஏற்கனவே விடுதலை சிறுத்தைகளும் பா.ம.க.வும் இணைந்து நடத்திய மாநாட்டில், அறிவிக்கப்பட்ட வேலூர் முற்றுகைப் போராட்டம் கைவிடப்பட்டு விட வில்லை; அந்தப் போராட்ட அறிவிப்பு அப்படியே நீடிக்கிறது; தூக்குத் தண்டனையை இந்திய அரசு ரத்து செய்யாவிட்டால், வேலூரில் 10 லட்சம் தமிழர்கள் திரண்டு, முற்றுகையிட்டு 3 தமிழர்களை மீட்டு வருவோம்; இதற்காக எந்தத் தியாகத்துக்கும் தயாராவோம் என்று அறைகூவல் விடுத்தார்.

பெரியார் திராவிடர் கழகம் கடந்த செப்டம்பர் 20 ஆம் தேதி தூக்குத் தண்டனைக்கு எதிராக சென்னையில் பரப்புரைக் கூட்டத்தைத் தொடங்கியது. தொடர்ந்து செப். 22 ஆம் தேதி விழுப்புரத்திலும், செப். 23 ஆம் தேதி புதுச்சேரியிலும், 25 ஆம் தேதி திருச்சியிலும், 26 ஆம் தேதி மதுரையிலும், 28 ஆம் தேதி உடுமலைப் பேட்டையிலும், 29 ஆம் தேதி பழனியிலும், 30 ஆம் தேதி ஈரோட்டிலும், அக்டோபர் முதல் தேதி கரூரிலும், 2 ஆம் தேதி சேலத்திலும், 3 ஆம் தேதி ஜோலார் பேட்டையிலும் கூட்டங்கள் நடந்தன. கழகத் தலைவர் கொளத்தூர் மணி அனைத்துக் கூட்டங்களிலும் பங்கேற்றார். பொதுச் செயலாளர் கோவை இராமகிருஷ்ணன், உடுமலை, ஈரோடு, ஜோலார்பேட்டை கூட்டங்களிலும், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திருச்சி, மதுரை கூட்டங்களைத் தவிர மற்ற அனைத்துக் கூட்டங்களிலும் பங்கேற்றனர்.

சென்னை கூட்டத்தில் வைகோ, உடுமலையில் நடந்த கூட்டத்தில் இயக்குனர் மணிவண்ணன், சேலத்தில் நடந்த கூட்டத்தில் கொங்கு இளைஞர் பேரவை அமைப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான தனி அரசு, ஈரோட்டில் நடந்த கூட்டத்தில் ம.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி, வழக்கறிஞர் ப.பா. மோகன், கரூர் கூட்டத்தில் ஆதித் தமிழர் பேரவை மாநில பொறுப்பாளர்கள் நாகராசு, இளங்கோவன், விழுப்புரம் கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த சிந்தனைச் செல்வன், ஜோலார் பேட்டையில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் மற்றும் மனித நேய மக்கள் கட்சியின் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினரும் சிறப்பு பேச்சாளர்களாக பங்கேற்றனர். ஜோலார் பேட்டையில் காஞ்சி மக்கள் மன்றத் தோழர்களின் கலை நிகழ்ச்சிகள் பறையாட்டத்துடன் நடந்தன.

மூன்று தமிழர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்தமாக தூக்குத் தண்டனையை ஒழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், இழந்த உயிரை மீட்க முடியாத இந்தத் தண்டனையை நிறைவேற்றுவதில் அப்பாவிகள் பலியாவதையும், தூக்கு தண்டனை தொடர்பான வழக்குகளில் நடந்த குழப்பங்களையும் தூக்குத் தண்டனையால் குற்றங்கள் குறைந்துவிடவில்லை என்பதற்கான காரணங்களையும், ராஜீவ் கொலையிலும், காந்தி, இந்திரா காந்தி கெலையிலும், உண்மைக் குற்றவாளிகளை மறைத்ததோடு, இந்தக் கொலைக்கு உடந்தையாக செயல்பட்டவர்களே காங்கிரசார்தான் என்பதையும் வரலாற்று தகவல்களோடு, விளக்கிப் பேசப்பட்டன. “மரண தண்டனையை ஒழிப்போம்”, “காந்தி படுகொலையில் பார்ப்பனப் பின்னணி” என்ற கழக வெளியீடுகளும் ஏராளமாக விற்பனையாயின. தூக்குத் தண்டனைக்கு எதிராக கழகம் வெளியிட்ட துண்டறிக்கைகள் கூட்டங்களில் வழங்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான மக்களிடம் தூக்குத் தண்டனைக்கு எதிரான கருத்துகளைப் பரப்பி, பெரியார் திராவிடர் கழகம் முதல்கட்ட பரப்புரையை நிறைவு செய்துள்ளது.

**– நமது செய்தியாளர்**

## அரசு அலுவலகங்களில் ஆயுத பூசையா?

## கழகத் தலைவர் மனு மீது நீதிபதிகள் அரசுக்கு தாக்கீது

அரசு அலுவலகங்களில் ஆயுத பூசை கொண்டாடுவதைத் தடை செய்து அரசாணைகள் இருந்தும், ஆயுத பூசைகள் கொண்டாடப்படுவதால் அவைகளை தடை செய்யக் கோரி பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடர்ந்த வழக்கு அக். 4 அன்று உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் அரி பரந்தாமன், அக்பர் அலி ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன் விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் வெங்கடேசு பதிலளிக்கையில் - அரசாணையைக் கண்டிப்பாகக் கடைபிடிக்குமாறு எல்லா அலுவலகங்களுக்கும் அரசு அறிவுறுத்தியுள்ளது என்று கூறினார். ஆனாலும், நீதிபதிகள், இது குறித்து இரண்டு வார காலத்தில் அரசு பதிலளிக்கக் கோரி, தாக்கீது பிறப்பிக்க உத்தரவிட்டனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சார்பில் வழக்கறிஞர் இளங்கோ நேர் நின்றார்.

# பரமக்குடி துப்பாக்கி சூடு: முதல்வர் ஜெயலலிதா தவறான தகவல்கள்

செப்டம்பர் 11, 2011 அன்று பரமக்குடி ஐந்து முக்குச் சாலையில் தமிழக காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் தடியடியில் 6 தலித் மக்கள் கொல்லப்பட்டும், சுமார் 30-க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றும் உள்ளதை பல்வேறு அரசியல் கட்சிகளும், மனித உரிமை அமைப்பினரும் கண்டித்துள்ளனர். இது தொடர்பாக பல்வேறு மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் கொண்ட உண்மை அறியும் குழு பேராசிரியர் அ.மார்க்ஸ் (மனித உரிமைகளுக்கான மக்கள் கழகம்) தலைமையில் அமைக்கப்பட்டது.

இக்குழு செப்டம்பர் 19, 20 ஆகிய தேதிகளில் பரமக்குடி, சுற்று வட்ட கிராமங்கள், இராமநாதபுரம், மதுரை ஆகிய பகுதிகளுக்குச் சென்று சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களையும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருப்பவர்களையும், அரசு அதிகாரிகளையும், பொது மக்களையும் சந்தித்து, விரிவாக அவர்களிடம் பேசி அவற்றை ஒலி ஒளி நாடாக்களில் பதிவு செய்து கொண்டது. முதல் தகவல் அறிக்கைகள், காவலில் வைக்கப்பட்டோருடைய விவரங்கள் ஆகியவற்றையும் தொகுத்தது.

செப்டம்பர் 11 துப்பாக்கிச் சூடு குறித்து குழு கண்டறிந்த உண்மைகள்:

- துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தி துப்பாக்கிச் சூட்டை விடவும் கொடுமையான மொழியில் சட்டமன்றத்தில் உரையாற்றிய முதல்வர் ஜெயலலிதா இரண்டு தவறான தகவல்களைக் கூறியுள்ளார். அவை:

  (அ) முத்துராமலிங்கத் தேவரை இழிவு செய்து மண்டல மாணிக்கம் கிராமச் சுவற்றில் எழுதியதாலேயே பழனிக் குமார் கொல்லப்பட்டான் என்றது. இது உண்மையல்ல. மண்டல மாணிக்கம் தேவர் சாதி ஆதிக்கம் உச்சமாக உள்ள ஒரு ஊர். இதன் காரணமாகவே இந்த கிராமத்திலுள்ள அரசுப் பள்ளியில் பயில்கிற தேவேந்திரர் குலப் பிள்ளைகள் மாற்றுச் சான்றிதழ் பெற்றுக் கொண்டு வேறு ஊர்களில் உள்ள பள்ளிகளில் சேர்கின்றனர். 2010-11 கல்வியாண்டில் மண்டல மாணிக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயின்ற 28 தலித் பிள்ளைகளில் இவ்வாண்டு 23 பேர் இவ்வாறு மாற்றுச் சான்றிதழ் பெற்றுச் சென்றுள்ளனர். இக்கிராமத்திற்குள் தலித் மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக உலவக்கூட முடியாத நிலையில் வேற்றூரில் படிக்கக்கூடிய 16 வயது சிறுவன் பழனிக்குமார் அங்குச் சென்று ஏழரை அடி உயரமுள்ள ஒரு சுவற்றில் தேவரை இழிவு செய்து எழுதினான் என்று சொல்வதை யாரும் ஏற்க இயலாது.

  (ஆ) ஜான் பாண்டியன் இந்த கிராமத்திற்கு படை திரட்டிச் சென்றதால் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டி வந்தது என்பது முதல்வர் சொன்ன இரண்டாவது பொய். ஜான் பாண்டியனைப் பொருத்தமட்டில் அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற ஒரு பூப்பு நீராட்டு விழாவிற்கு வருகிறார். இம்மானுவேல் சேகரன் நினைவு நாளுக்கு அவர் செல்லக் கூடாதென இராமநாதபுரம் ஆட்சியர் தடையுத்தரவு இட்டதை அறிந்து அவர் திரும்பவும் திருநெல்வேலி செல்கிறார். அப்போது அவர் கைது செய்யப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள துப்பாக்கி சுடும் பயிற்சிப் பள்ளியில் வைக்கப்படுகிறார். எவ்வகையிலும் நிர்வாகம் மற்றும் காவல் துறையின் உத்தரவுகளை மீறுவது என்கிற முனைப்பு ஜான்பாண்டியனிடம் இருக்கவில்லை என்பதே உண்மை. தடையை மீறி அவர் படை திரட்டிச் சென்றதாக முதல்வர் கூறியுள்ளது, அதிகாரிகளின் கூற்றை அவர் அப்படியே ஏற்றுக் கொண்டதையே காட்டுகிறது.

- செப்டம்பர் 11 அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு முழுக்க முழுக்கக் காவல் துறையின் திட்டமிட்ட செயலாகத் தெரிகிறது. தேவேந்திரர்களின் ஓர் அடையாளத் திருவிழாவாக மாறிப் போன ஒரு நாளில், அஞ்சலி செலுத்த வந்த அவ்வினத் தலைவர் ஒருவரைத் தடுத்தது ஒரு முட்டாள் தனமான செயல் மட்டுமல்ல; கலவரத்தைத் தூண்டக்கூடிய செயலும் கூட தவிரவும், தடுத்தவுடன் பணிந்து திரும்பியவரைக் கைது செய்து, இது குறித்த செய்தி அஞ்சலி செலுத்த வந்த மக்கள் மத்தியில் பரவக் காரணமாக இருந்தது இன்னொரு மிகப் பெரிய வன்முறையைத் தூண்டும் செயலாக அன்று அமைந்துள்ளது.

- தியாகி இம்மானுவேல் சேகரன் பேரவைத் தலைவர் பூ.சந்திரபோஸ், மிகுந்த நல்லெண்ணத்துடன் அதிகாரிகளை அணுகி ஜான் பாண்டியனை அன்று கைது செய்தது நல்லதல்ல எனவும், அவரை விடுதலை செய்து சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டும் எனவும் கோரியபோது, “சட்டம் ஒழுங்கு பற்றி நீங்கள் பேச வேண்டாம்; முதலில் அவர்களைக் கலைந்து போகச் சொல்லுங்கள்” என சந்தீப் மிட்டல் கூறி எந்தவித சமாதானத்திற்கும் வாய்ப்பளிக்காமல் நடந்துள்ளார்.

- ஐந்து முக்கில் அன்று குவிக்கப்பட்டிருந்த காவல்துறையினரின் எண்ணிக்கை சுமார் 2000 என நேரில் பார்த்த பலரும் எங்களிடம் கூறினர். சாலை மறியலுக்கு அமர்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 50 தொடங்கி அதிகபட்சமாக 200 அல்லது 300 என்ற அளவிலேயே இருந்துள்ளது. கூட்டம் அதிகமாக வரும் என எதிர்பார்த்து அவ்வழியே போக்குவரத்து முன்னதாகவே தடை செய்யப்பட்டது என்பதை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அருண் ராயே எங்களிடம் ஒத்துக் கொண்டார். இந்நிலையில் 2000 ஆயுதம் தாங்கிய காவல் துறையினர் கூடியிருந்த 200 மக்களை, அவர்கள் உண்மையிலேயே கல்லெறிந்து வன்முறையில் ஈடுபட்டிருந்தால்கூட இலேசான தடியடி அல்லது கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்துக் கலைத்திருக்க முடியும். ஆனால் எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி துப்பாக்கிச் சூட்டை நடத்தி 6 பேரைக் கொன்றுள்ளனர், சந்தீப் மிட்டல், செந்தில் வேலன், சிவக்குமார் ஆகியோர் தலைமையில் இருந்த காவல் துறையினர்.

- துப்பாக்கிச் சூட்டின்போது அங்கு நின்று நெற்றிப் பொட்டில் குண்டடிப்பட்டு, இன்று மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவரும் மாணிக்கம், குண்டடிப்பட்டு இறந்த ஒருவரை தூக்கிச் சென்று காப்பாற்ற முயன்ற மணி நகர் அம்பேத்கர் இளைஞர் மன்றச் செயலாளர் சுரேஷ், கடுமையாக அடிக்கப்பட்டு இன்று இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெறும் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் வெள்ளைச்சாமி உள்ளிட்ட பலரும் எம்மிடம் நேரில் கூறியதிலிருந்து, அன்று எந்தவித முன்னெச்சரிக்கையும் இன்றி தண்ணீர் பீய்ச்சியடித்தல், கண்ணீர்ப் புகை பிரயோகம் முதலிய முன் நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளாமல் திடீரென்று துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

- துப்பாக்கிச் சூட்டையும் தடியடியையும் மேற்கொண்ட காவல்துறையினரும் அதிகாரிகளும் கடும் தலித் விரோதப் போக்குடன் இருந்துள்ளனர். சாதியைச் சொல்லி இரிவாகப் பேசிய வண்ணமே அவர்களை அடித்தும் சுட்டும் வீழ்த்தியுள்ளது பற்றி எம்மிடம் பலரும் முறையிட்டனர். இது அரசு நிர்வாகத்தின் மேல் சாதி ஆதரவு மனப்பான்மை, தலித் விரோதப் போக்கு, தலித்கள் என்றாலே கலவரம் செய்யக் கூடியவர்கள் என்கிற எண்ணத்துடன் அவர்கள் செயல்படுவது ஆகியவற்றிற்குச் சான்றாக உள்ளது.

- துப்பாக்கிச் சூட்டில் பல்லவராயனேந்தல் கணேசன் (55), வீராம்பலைச் சேர்ந்த பன்னீர் செல்வம் (50), மஞ்சூரைச் சேர்ந்த ஜெயபால் (19), கீழ்க்கொடுமாநல்லூர் தீர்ப்புக்கனி (25), காட்டுப் பரமகுடியைச் சேர்ந்த முத்துக்குமார் (25), காக்கனேந்தல் வெள்ளைச்சாமி (55) ஆகிய ஆறு பேர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கணேசன், வெள்ளைச்சாமி, ஜெயபால் ஆகிய மூவரின் இல்லங்களுக்கும் சென்று அவர்களது உறவினர்களைச் சந்தித்தோம். இவர்கள் அனைவருமே அந்த நேரத்தில் அங்கு வந்து சிக்கிக் கொண்டவர்களே அன்றி, அஞ்சலி செலுத்தும் நோக்குடன் வந்தவர்களோ ஜான் பாண்டியனின் அமைப்பைச் சேர்ந்தவர்களோ அல்ல. கணேசன் தன் மகளின் திருமண அழைப்பிதழை விநியோகிக்கச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைக் கலகம் செய்ய வந்தவர்கள் என காவல் துறை கூறுவதை ஏற்க இயலாது. பெரும்பாலான துப்பாக்கிச் சூடு இடுப்புக்கு மேலேயே நடத்தப்பட்டுள்ளது. மாணிக்கம் நெற்றிப் பொட்டில் சுடப்பட்டுள்ளார்.

- குண்டடிப்பட்டு இறந்துபோன ஜெயபால் மற்றும் அப்பல்லோவில் சிகிச்சைப் பெற்று வரும் ஜெய பிரசாந்த் ஆகியோருக்கு குண்டு காயம் முதுகுப் புறத்திலிருந்தே தொடங்குகிறது. அவர்கள் தப்பி ஓடும்போது காவல் துறையினர் சுட்டிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

### கோரிக்கைகள்

- தாக்குதல் நடத்திய போலீஸ் அதிகாரிகளிடமே புலன் விசாரணையை அளித்திருப்பது கேலிக்குரியது. சி.பி.ஐ. விசாரணை ஒன்று உயர்நீதிமன்ற மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
- சந்தீப் மிட்டல், செந்தில் வேலன், சிவக்குமார் ஆகிய காவல்துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, அவர்கள் மீது வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட வேண்டும்.
- இறந்தவர்களின் குடும்பத்திற்கு இந்த இழப்பீட்டுத் தொகையை 10 இலட்ச ரூபாயாக உயர்த்த வேண்டும். இறந்தவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை அளிக்க வேண்டும். அது, சத்துணவு உதவியாளர் என்பது போன்ற வேலைகளாக அல்லாமல் வேறு உயர்ந்த வேலைகள் அளிக்கப்பட வேண்டும்.
- காயமடைந்தவர்களுக்கு அவர்களது காயத்திற்குத் தகுந்தாற்போல, குறைந்தபட்சம் 1 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்.
- மண்டல மாணிக்கம் போன்ற கிராமங்களிலுள்ள பள்ளிகளில் தலித் குழந்தைகள் மாற்றுச் சான்றிதழ் பெற்று வெளியேறுவது மிகவும் கவலையளிக்கக்கூடியதாக உள்ளது. இது குறித்த விசாரணை ஒன்றை மாவட்டக் கல்வி அலுவலரும், ஆதி திராவிட நலத் துறையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
- பரமக்குடி, இராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் காவல்துறை, வருவாய்த் துறை, உளவுத் துறை ஆகியவற்றிலுள்ள அதிகாரிகளில் ஆதிக்கச் சாதியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர், தலித்துகள் எவ்வளவு பேர் என்ற விவரத்தை அரசு வெளியிட வேண்டும். இந்தத் துறைகள் ஒவ்வொன்றிலும் போதிய அளவில் இப்பகுதிகளில் தலித் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.
- துப்பாக்கிச் சூட்டை அரசியல் கட்சிகள் பலவும் கண்டித்துள்ளன. சாதிக் கட்சிகள், குறிப்பாக முக்குலத்தோர் சார்ந்த சாதிக் கட்சிகள் கண்டிக்காதது வருந்தத் தக்கது.

இவ்வாறு உண்மை அறியும் குழு தனது அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது.

## திண்டுக்கல் மாவட்டக் கழகக் கூட்டம்

திண்டுக்கல் மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் 14.9.2011 அன்று மாவட்டத் தலைவர் துரை. சம்பத் தலைமையில் திண்டுக்கல் வாழக்காபட்டி முத்தமிழ் நகர் கருந்தினை இல்லத்தில் நடைபெற்றது. 29.9.2011 அன்று திண்டுக்கல்லிலும், 30.9.2011 செம்பட்டி, வேடசந்தர் ஒட்டன் சத்திரம், பழனியிலும் நடைபெற்றது. மரண தண்டனை ஒழிப்புப் பிரச்சார பயணத்தினை வரவேற்று சிறப்பான முறையில் பொதுக் கூட்டம், தெருமுனைப் பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு கலந்தாலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

பரமக்குடியில் தலித்துகள் மீது துப்பாக்கி சூடு நடத்திய காவல்துறையை வன்மையாகக் கண்டித்து தீர்மானிக்கப்பட்டது. இம்மானுவேல் சேகரன் நினைவு நாளை அரசு விழாவாக நடத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தின் இறுதியாக ஒட்டன்சத்திரம் நகர் கழகத் தலைவராக ஜெ.இரவிச்சந்திரன், நகர கழகச் செயலாளராக சின்னச்சாமி, ஒன்றியக் கழக தலைவராக அர.கதிர்வேல், ஒன்றியக் கழகச் செயலாளராக சிவா (எ) முருகேசன் ஆகியோரை மாவட்ட தலைவர் சம்பத் நியமித்தார். கூட்டத்தில் தி. தாமரைக்கண்ணன், மாவட்ட செயலாளர் க.சூ.இரவனா, மாவட்ட அமைப்பாளர் நல்லதம்பி, பெரியார் நம்பி, ஒட்டன்சத்திரம் சின்னச்சாமி மற்றும் பழனித் தொகுதி தோழர்கள் கலந்து கொண்டனர்.

# ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (1)

*ராஜீவ் காந்தி ஈழத்துக்கு அனுப்பி வைத்த இந்திய ராணுவம் 1987 ஆம் ஆண்டில் நிகழ்த்திய போர்க் குற்றங்கள், இனப் படுகொலைகள் பற்றிய ஒரு தொகுப்பு:*

அக்டோபர் 10 ஆம் தேதிக்கு முன்னரே முல்லைத் தீவில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றைச் சுற்றி வளைத்த இந்திய அமைதி காக்கும் படையினர் அங்கிருந்த பொருட்களை எடுத்துக் கொண்டு முகாமை வெடி வைத்துத் தகர்த்தனர்.

**10.10.87**

இன்று அதிகாலை 5 மணியளவில் யாழ் நகருக்குள் உள்ள ஈழ முரசு, முரசொலி ஆகிய 2 தினசரித் தமிழ்ப் பத்திரிகை அலுவலகங்களுக்கு புகுந்த இந்திய அமைதி காக்கும் படையினர் அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஊழியர்களை ஆயுத முனையில் கைது செய்ததுடன் அலுவலகங்களையும், அச்சு இயந்திரங்களையும் வெடிகுண்டுகள் வைத்துத் தகர்த்தனர்.

அதே தினத்தில் கொக்குவில் என்னும் இடத்தில் இருந்த விடுதலைப்புலிகளின் தொலைக்காட்சி சேவையான ‘நிதர்சனம்’ தொலைக்காட்சி நிலையத்துக்குள் புகுந்து அங்கிருந்த தொலைக்காட்சி ஒளிபரப்பு உபகரணங்களை அபகரித்துச் சென்றனர்.

(விடுதலைப் புலிகள் திருட்டுத்தனமாக வைத்திருந்த ரேடியோ சாதனங்களைத் தாம் கைப்பற்றியதாகவும், இந்தியாவுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிப் பிரசுரங்களை வெளியிட்டு வந்த அச்சகங்களைத் தாம் முடக்கி வைத்திருப்பதாகவும் இந்திய அமைதி காக்கும் படையினர் தம் நடவடிக்கைகள் குறித்து சமாதானம் கூறினர்.)

1. விடுதலைப் புலிகள் தங்களது ரேடியோ, தொலைக்காட்சி சேவைகளைப் பல ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள். விடுதலைப் புலிகளின் ‘நிதர்சனம்’ தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்பட்ட பல நிகழ்ச்சிகளை இந்திய அரசு அதிகாரிகள் வேண்டிப் பெற்று தூர்தர்ஷன் தொலைக்காட்சியில்கூட ஒளிபரப்பியிருக்கிறார்கள். இந்நிலையில் திடீரென்று எந்தவித தகவலும் கொடுக்காமல் தொலைக்காட்சி நிலையத்தினுள் புகுந்து அங்குள்ள சாதனங்களை அத்துமீறித் தூக்கிச் சென்றதானது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கையேயாகும்.
2. இலங்கை அரசினால் செய்திப் பத்திரிகைகளாகப் பதிவு செய்யப்பட்டு, பல ஆண்டுகளாக வெளி வந்து கொண்டிருந்த ஈழ முரசு, முரசொலி ஆகிய பத்திரிகை அலுவலகங்களை இந்திய அமைதி காக்கும் படையினர் தாக்கித் தகர்த்ததாவது, தமது ஜனநாயக உரிமைகளை நசுக்கிய செயலாகவே ஈழத் தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

மதியம் 2.15 மணியளவில் இந்திய அமைதி காக்கும் படையினர் கோட்டைப் பக்கமாகவும், கோப்பாய் பக்கமாகவும், முத்திரைச் சந்திப் பக்கமாகவும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி முன்னேறியதைத் தொடர்ந்து, மக்களையும், தங்களையும் பாதுகாக்கும் நோக்குடன் விடுதலைப் புலிகள் தற்காப்பு யுத்தத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர். யாழ் குடா நாடு முழுவதிலும் இந்திய இலங்கை இராணுவம் கூட்டாகத் தேடுதல் வேட்டை நடத்தியதில் 100-க்கும் மேற்பட்ட பொது மக்கள் கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சிப் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்திய இந்திய அமைதி காக்கும் படையினர் அங்கு பத்துப்பொது மக்களைச் சுட்டுக் கொன்றனர்.

**11.10.87**

இன்று காலையில், இந்திய அமைதி காக்கும் படையினரால் ஏவப்பட்ட செல் கைலாசப் பிள்ளையார் கோவில் மீது விழுந்து வெடித்ததில் 12 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமுற்றனர்.

பனையில் விடுதலைப் புலிகளின் வேன் ஒன்றை விரட்டிச் சென்றும் பிடிக்க முடியாமற் போகவே ஆத்திரமுற்ற இந்திய அமைதி காக்கும் படையினர் திரும்பிச் செல்லும் வழியில், எதிர்ப்பட்ட மக்களையெல்லாம் கண்மூடித்தனமாகச் சுட்டனர். இதில் இரு குழந்தைகள் உட்பட 13 பேர் இறந்தனர்.

இரவு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சியில் இந்திய அமைதி காக்கும் படையினர் முழு மூச்சாக இறங்கினர். இரவு 1 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடப் பகுதியில் ஏராளமான இந்திய அமைதி காக்கும் படையினர் கெலிகாப்டர்கள் மூலம் வந்திறங்கினர். அவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 8 மணி நேரத்துக்கும் அதிகமாக நடைபெற்ற கடும் சண்டையில் 40க்கும் மேற்பட்ட இந்திய அமைதி காக்கும் படையினர் கொல்லப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 20 எஸ்.எம்.ஜி., 6 எஸ்.எல்.ஆர்., 3 எல்.எம்.ஜீ., 2 ஜி.பி.எம்.ஜீ., ஒரு ராக்கட், லோஞ்சர் உட்பட ஏராளமான ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். அதனால் ஆத்திரமுற்ற இந்திய அமைதி காக்கும் படையினர் பொது மக்களைத் தாக்கினர். அதில் 30 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 250 பேர் காயமுற்றனர்.

**12.10.87**

இன்று நடைபெற்ற சண்டையிலும் ஏராளமான இந்திய அமைதி காக்கும் படையினர் கொல்லப்பட்டனர். இந்திய அமைதி காக்கும் படையினர் மேற்கொண்ட மோட்டார் பீரங்கித் தாக்குதல்களின் போது பல பொது மக்கள் கொல்லப்பட்டனர். இந்திய அமைதி காக்கும் படையினர் பொது மக்களை வீதியில் நிறுத்தி மிகக் கொடூரமான முறையில் அவர்கள் மீது கவச வாகனங்களையும், ஜீப் வண்டிகளையும் ஏற்றி நசுக்கிக் கொன்றனர். சுமார் 40 பொது மக்களின் சடலங்கள் உருத் தெரியாதவாறு சிதைந்து அப்புறப்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன.

யாழ் பல்கலைக்கழகத்தினுள் விடுதலைப் புலிகளிடம் சிக்கியவர்களை மீட்க என பாராசூட்டின் மூலம் இறக்கப்பட்ட இந்திய அதிரடிப் படையினர் படுமோசமான செயல்களில் இறங்கினர். அவர்கள் திரும்பிச் செல்லும்போது 12 சடலங்களை மட்டுமே எடுத்துச் சென்றனர்.

விடுதலைப் புலிகள் தங்களிடம் சிக்கிய இந்தியப் படையினரின் 29 சடலங்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இந்தியத் தரப்பினரிடம் கொடுக்கும் ஒழுங்குகளை மேற்கொண்டனர். ஆனால் அந்த 29 பேரின் சடலங்கயையும் அப்போது இருந்த சூழ்நிலையில் தாங்கள் பொறுப்பெடுத்துச் செல்வது சாத்தியமில்லை என்று இந்திய இராணுவப் பொறுப்பதிகாரி யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மூலம் விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து 29 சடலங்களும் அங்கேயே தகனம் செய்யப்பட்டன.

பாராசூட் மூலம் இறங்கிய இந்திய அதிரடிப் படையினர் படுதோல்வியுடன் திரும்பி ஓடினர்.

உரும்பராயில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இந்தியப் படையினர் கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலின்போது அப்பாவிப் பொது மக்கள் பலர் (இரு மூதாட்டிகள், இரு குழந்தைகள் உட்பட) கொல்லப்பட்டனர்.

12 ஆம் தேதி மாத்திரம் 104 பொது மக்கள் செல்காயங்களினால் பாதிக்கப்பட்டு யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்தியப் படையினர் பெண்களைக் கொடூரமான முறையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிய பின்னர் கொலை செய்துள்ளனர். பெற்றோருக்கு முன்பாகவே அவர்களது பிள்ளைகள் பயங்கரமான முறையில் கொலை செய்யப்பட்டனர். உடம்பின் பல பகுதிகள் கெட்டுப் போன நிலையில் இவர்கள் இறந்து கிடக்கக் காணப்பட்டனர்.

சுதுமலை, உரும்பராய், கொக்குவில் ஆகிய பகுதிகளில் ஏராளமான பெண்கள் இந்தியப் படையினரால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். உயிர் தப்பிய 13 பெண்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணம் பொத்துவிலில் பேச்சு வார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளரை ஒரு கோயிலுக்கு அழைத்த இந்திய அமைதி காக்கும் படையினர் அவரைக் கைது செய்து கொண்டு சென்று விட்டனர்.

**13.10.87**

இன்று யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட மோட்டார் செல்கள் விழுந்து வெடித்ததனால் யாழ் போதனா வைத்திய சாலையில் 3 இடங்கள் பெரும் சேதமுற்றன. கூரைகள் உடைந்து மருந்துப் பொருட்களும் பெருமளவில் சேதமுற்றன. மருத்துவமனை வீதியிலுள்ள மாதா கோயில் வளவில் பாதிரியார் தங்கும் விடுதியும் செல் விழுந்து சேதமுற்றது. யாழ் நகரில் பரவலாகப் பல இடங்களிலும் செல் விழுந்து வெடித்ததனால் ஏராளமான பொது மக்கள் கொல்லப்பட்டனர். வீதிகளில் மக்கள் நடமாட்டம் இல்லை.

அதிகாலையிலேயே தேடுதல் வேட்டை என்ற பெயரில் வீடுவீடாகச் சென்ற இந்திய அமைதி காக்கும் படையினர் குழந்தை, சிறுவர், முதியோர், பெண்கள் என்று பாராமல் 60 அப்பாவிப் பொது மக்களைக் கொன்று குவித்தனர். வீடுகள், வீதிகள் எனக் காணும் இடமெங்கும் பிணங்களே தென்பட்டன. வீதிகளில் கிடந்த பிணங்கள் அனேகமாக எல்லாமே இராணுவ வாகனங்களினால் நசுக்கப்பட்டுச் சிதைவுற்றுக் காணப்பட்டன.

**14.10.87**

இன்று திருகோணமலை மாவட்டம் சாம்பல் தீவுப் பாலத்துக்கு அண்மையில் வைத்து விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 15 இந்திய அமைதி காக்கும் படையினர் பலியாயினர்.

உடுவிலில் 15 பெண்கள் இந்திய அமைதி காக்கும் படையினரால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கி கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட பெண்களின் அங்கங்கள் கடித்துக் குதறப்பட்டிருந்ததாகவும், உடல் முழுவதும் இரத்தக் காயங்கள் இருந்ததாகவும் பின்னர் இவர்களது உடல்கள் செயின் பொருத்திய கவச வாகனங்களில் கீழ் போடப்பட்டு நசுக்கப்பட்டதனால் உடல்கள் ரொட்டி போலச் சிதைந்து விட்டதாக இவற்றை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

இந்த வெறிச் செயலைச் செய்த இந்திய அமைதி காக்கும் படையினர் திரும்பிச் செல்கையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் அவர்கள் சென்ற கவச வாகனம் முற்றாக வெடித்துச் சிதறியது. அதில் சென்ற அனைவரும் கொல்லப்பட்டனர்.

வடமராட்சியிலுள்ள தொண்டமானாறு முகாமிலிருந்து யாக்கரைக்கு வந்த இந்திய அமைதி காக்கும் படையினரின் டிரக் வண்டி ஒன்றுக்கு, இராணுவ முகாமிலிருந்து 500 மீட்டர் தூரத்திலுள்ள யாக்கரைப் பிள்ளையார் கோயிலுக்கருகில் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் வண்டியில் வந்த 8 இந்திய அமைதி காக்கும் படையினரும் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான் எனுமிடத்தில் வைத்து இந்திய அமைதி காக்கும் படையினரை இடை மறித்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 இந்திய படையினர் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடந்தனர்.

இந்திய இராணுவத்துக்கு உதவியாக குண்டுவீச்சு விமானங்களும் கெலிகாப்டர்களும் டாங்குகளும் வந்தன. ஏராளமான இந்தியப் படை வீரர்கள் யாழ் முற்றுகைத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். 14.10.87 அன்று மட்டும் நகரை நோக்கி 70 மோட்டார் செல்கள் இந்தியப் படையினரால் ஏவப்பட்டன. குண்டு வீச்சு விமானங்களிலிருந்தும் கெலிகாப்டர்களில் இருந்தும் 90 கலிபர், 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. விமானத்திலிருந்து குண்டுகளும் போடப்பட்டன.

14 ஆம் தேதி வரை 21 இந்திய அமைதி காக்கும் படையினர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டனர். 40 எஸ்.எல்.ஆர். 20க்கும் மேற்பட்ட எஸ்.எம்.ஜி, 2 ராக்கட் சோலஞ்சர், ஒரு மோட்டார், 3 கவச வாகனங்கள் என்பவற்றையும் இந்தியப் படையினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

(தொடரும்)


**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:

ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# திருப்பூரில் பறை முழக்கத்துடன் இரு சக்கர வாகனப் பேரணி





18.09.2011 ஞாயிறு அன்று தந்தை பெரியார் 133 வது பிறந்த நாள் விழா திருப்பூர் மாவட்ட கழகத்தின் சார்பாக மாவட்ட தலைவர் சு. துரைசாமி தலைமையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாநகர செயலாளர் முகில்ராசு தொடர் வண்டி நிலையம் முன்பு கொடியேற்றி, விழாவினை தொடங்கி வைத்தார்.

60-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனத்தில் தோழர்கள் பேரணியாகச் சென்று ராயபுரம், புஷ்பா திரையரங்கம், பெரியார் காலனி, அனுப்பர் பாளையம், அம்மா பாளையம், அன்னையம்பாளையம், போயம் பாளையம், எம்.எஸ்.நகர், பழைய பேருந்து நிலையம், சந்தைப் பேட்டை, வெள்ளியங்காடு, வீரபாண்டி, வீரபாண்டி பிரிவு, பாரதி நகர், இடுவம்பாளையம், முருங்கப் பாளையம், ஜீவா நகர், ரங்கநாதபுரம், கொங்கணகிரி, மாஸ்கோ நகர் பெரியார் திடல் ஆகிய இடங்களில் கழகக் கொடிகளை ஏற்றினர். வழி நெடுக பறை முரசு முழங்க தோழர்கள் அணி வகுத்துச் சென்றது மக்களை ஈர்த்தது. அனைவருக்கும் மாவட்டக் கழகத் தலைவர் துரைசாமி, தனது இல்லத்தில் அசைவ உணவு வழங்கினார்.

நிகழ்வில் கலந்து கொண்டு கொடியேற்றிய தோழர்கள்: பாடகர் தியாகு, பாண்டியநாதன், ஜகதீசன், பிரேம் குமார், தனபால், முத்து, பாண்டி செல்வி, தண்டபாணி, ஆசிரியர் சிவகாமி, பாரதி வாசன், தனகோபால், இராசசிங்கம், இராமசாமி, மூர்த்தி, மணிகண்டன், ஜீவா நகர் குமார், இளங்கோ, சீனிவாசன், நீதிராசு.

மாலை 6 மணிக்கு பெரியார் திடலில் செங்கொடி - முத்துக்குமார் அரங்கில் மேட்டூர் டி.கே.ஆர். பகுத்தறிவு இசைக் குழுவின் இசை நிகழ்ச்சியும், மரண தண்டனை ஒழிப்புப் பொதுக் கூட்டமும் கழக ஒன்றிய தலைவர் அகிலன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்விற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன், புலவர் புலமைப்பித்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மேலும் கழக நிர்வாகிகளும், தோழர்களும் பெரும் திரளாகக் கலந்து கொண்டனர். இறுதியாக பாலு நன்றி கூறினார்.

### சேலம் மேற்கு மாவட்ட கழகம் வலியுறுத்தல் கடிதம்

ஆயுத பூசை அரசு அலுவலகங்களில் கொண்டாடுவது அரசு ஆணைக்கு எதிரானது என்பதை விளக்கி, சேலம் மேற்கு மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பாக சேலம் மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்கள் அனைத்திற்கும் கடிதங்கள், பதிவு தபாலில் அனுப்பப்பட்டு அதற்கான சான்றுகள் பெறப்பட்டன.

குறிப்பாக, சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர், கொளத்தூர், கருமலைக் கூடல், மேச்சேரி, தாரமங்கலம், சலகண்டபுரம், எடப்பாடி, பூலாம்பட்டி ஆகிய ஊர்களிலுள்ள காவல் நிலையங்கள், காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகம், நகராட்சி அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், மேற்குறிப்பிட்ட அனைத்து ஊர்களிலும் உள்ள மின்வாரிய மின் விநியோக அலுவலகங்கள், மேட்டூர் அனல் மின் நிலையத்தின் கீழ் இயங்கும் அனைத்து நிர்வாக அலுவலகங்கள் அனைத்திற்கும் சென்ற ஆண்டு அனுப்பியது போலவே இவ்வாண்டும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட தலைவர் கி.முல்லைவேந்தன், மாவட்ட செயலாளர் சூரியகுமார், மாவட்ட அமைப்பாளர்கள் நங்கவள்ளி அன்பு, அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்கள், நகர மற்றும் கிளை கழக பொறுப்பாளர்கள் என அனைவரும் இணைந்து பணியாற்றி அறுபதுக்கும் மேற்பட்ட கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

### உடுமலை கழகம் அரசு அலுவலகங்களுக்கு கடிதம்

உடுமலைப்பேட்டை மடத்துக்குளம் பகுதி அரசு அலுவலகங்களில் ஆயுத பூசை கொண்டாடுவதை நிறுத்த பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

நமது நாடு மதச்சார்பற்ற நாடு. இதில் அரசு சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் எந்த மதம் சார்ந்த படங்களும் விழாக்களும் கொண்டாடுவது இந்திய அரசியல் சட்டத்தின் குறிக்கோளுக்கு எதிரானது. ஆனால், அரசு அலுவலகங்களில் ஆயுத பூசை கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை உடனடியாக கைவிடக்கோரி உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் கழகத்தின் சார்பில் அரசு அலுவலகங்களுக்கு கடிதம் பதிவுத் தபாலில் 3.10.2011 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

### பெரம்பூரில் வழக்காடு மன்றம்

வடசென்னை மாவட்டம், பெரம்பூர் பகுதி சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு 15.09.2011 அன்று பெரம்பூர் ராகவா தெரு காந்தி சிலை அருகில் வழக்காடு மன்றம் நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கழகப் பொருளாளர் நா. பாசுகர் வரவேற்புரை ஆற்றினார். "தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்கள் வெற்றிப் பெற்றன என்பது குற்றம்" என்னும் தலைப்பில் சைதை மா. அன்பரசன் வழக்குத் தொடுத்தார். வழக்கறிஞர் சு. குமாரதேவன் வழக்கினை மறுத்தார். நடுவராக கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் பங்கேற்றார். பெரியார், அண்ணா காலத்தில் இருந்த அரசியல் பண்பாடு, நாகரிகம், கொள்கை உறுதி போன்றவை தற்போது கடைபிடிக்கப்படுவதில்லை என்றும், அதற்குக் காரணம் தற்போதைய அரசியல்வாதிகளே என்று நடுவர் தன் தீர்ப்பில் பல்வேறு உதாரணங்கள் காட்டி உரையாற்றினார். மாவட்ட பொருளாளர் ஜனா நன்றி நவில நிகழ்ச்சி முடிந்தது. எ. கேசவன், செ. குமரன், ஆதவன் ஆகியோர் நிகழ்ச்சித் தொடக்கத்தில் உரை நிகழ்த்தினர்.

### மணமகன் தேவை



மதுரை கழகத் தோழர் கைவண்டி கருப்பு மகள் அறிவுச் செல்விக்கு (வயது 25) மறுமணம் செய்ய முன்வரக் கூடிய மணமகன் தேவை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அறிவுச் செல்வியின் கணவர், எதிர்பாராத விபத்தில் மரணமடைந்து விட்டார். அறிவுச் செல்வி 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார்.

தொடர்புக்கு:
கைவண்டி கருப்பு,
42, மேலப் பொன்னகரம் 6வது தெரு, இராசா மோட்டார்,
மதுரை – 625 016.

### வெட்கம்!

**சரசுவதி பூசை கொண்டாடும் நாட்டில் – கல்விக் கொள்ளை நடக்குது!**

**ஆயுத பூசை போடும் நாட்டில் – ராணுவச் சட்டங்கள் ஆளுது!**

### வரப்பெற்றோம்


**அய்.நா.குழு அறிக்கைத் தொகுப்பு: ஈழத் தமிழினப் படுகொலை**

ஈழத் தமிழர்கள் மீது இலங்கை ராணுவம் கட்டவிழ்த்துவிட்ட போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்களை அய்.நா. பொதுச் செயலாளர் பான்கி மூன் நியமித்த குழு மிக விரிவாக பதிவு செய்து அறிக்கை தயாரித்துள்ளது. அறிக்கையின் முக்கிய பகுதிகளைத் தொகுத்து அன்னை முத்தமிழ்ப் பதிப்பகத்தார் நூலாக வெளியிட்டுள்ளனர். அய்.நா. அறிக்கையைத் தொடர்ந்து, அது பற்றி, ஏடுகளில் வெளியான கட்டுரைகளும், பின் இணைப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன. இறுதிப் போரின்போது ஒவ்வொரு நாளும் நடந்த கொடூரங்கள் உள்ளத்தை உறையச் செய்கின்றன. மக்களிடம் இனப் படுகொலைகளை எடுத்துரைப்பதற்கு சிறந்த கையேடாகப் பயன்படும். இந்த நூல் 72 பக்கங்கள்; விலை: ரூ.40. கிடைக்குமிடம்: 96, பெரியார் சாலை, பாலவாக்கம், சென்னை-600 041. பேசி: 9444244017

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 7th October 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | அக். 13, 2011 | புரட்சி 10 | முழக்கம் 39 | விலை: ரூ.2.50


## ஜக்கிவாசுதேவ் மதப் பிரச்சாரத்தை எதிர்த்து சேலத்தில் கழகத்தினர் துண்டறிக்கை: பரபரப்பு

# “கிரிமினல் குற்றவாளியே திரும்பிப் போ”

சேலம் அரசு கலைக் கல்லூரியில் யோகா பயிற்சி என்ற பெயரில் மதப் பிரச்சாரம் செய்ய வந்த ஜக்கி வாசுதேவையும், அதற்கு அரசு கல்லூரியில் இடம் வழங்கிய கல்லூரி முதல்வரையும் கண்டித்து, சேலம் கழகத் தோழர்கள் எதிர்ப்பு துண்டறிக்கைகளை வழங்கினர். ஜக்கிவாசுதேவ் மதப்பிரச்சாரம் செய்த சேலம் அரசு கலைக் கல்லூரி வாயிலிலேயே கழகத் தோழர்கள் துண்டறிக்கைகளை வழங்கியது, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மதப் பிரச்சாரம் தொடங்கிய செப்டம்பர் 9 ஆம் தேதி பகல் 11 மணியளவில் சேலம் கழகத் தோழர்கள் பாலு, டேவிட், பரமேசுவரன், அம்மாப்பேட்டை தோழர்கள் செந்தில், கோபி, பிரபு, அருண்காந்தி, தங்கராசு உள்ளிட்ட கழகத் தோழர்கள் கூடி, எதிர்ப்பு துண்டறிக்கைகளை வழங்கினர். துண்டறிக்கையில் ஜக்கி வாசுதேவனின் மோசடிகள் அம்பலப்படுத்தப்பட்டிருந்தன. துண்டறிக்கை விவரம்:

அன்பார்ந்த பொது மக்களே,

சேலம் அரசு கலைக் கல்லூரியில் வருகிற 30.9.2011 முதல் 2.10.2011 வரை ஈஷா யோகா என்கிற பெயரில் தியானலிங்கம் என்கிற மதப்பிரச்சாரம் செய்ய ‘கிட்டு’ என்கிற ‘கிருஷ்ண மூர்த்தி’ என்கிற ‘ஜாவா வாசுதேவன்’ என்கிற “ஜக்கி வாசுதேவ்” வருகிறார்.

இவர் கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு கோவை மாநகரத்தில் அமைந்துள்ள ப்ரூபாண்ட் ரோடு மேம்பாலம் கீழ் புறத்தில் குதிரை வண்டி நிறுத்துமிடமாக பயன்பாட்டில் இருந்த இடத்தில் சில சமூக விரோதிகளுக்கு கஞ்சா வியாபாரம் செய்ததாகவும், இவருக்கு ‘ரிச்சர்ட்’ என்ற பிரபல ரவுடி வியாபாரத்தில் உதவியதாகவும், இவர்கள் இருவருக்கும் ஒரு பெண்ணுடன் தொடர்பு இருந்ததாகவும் கூறப்படுகிறது.

வியாபாரத்தின் மூலமாகவோ அல்லது பழக்க வழக்கத்தின் மூலமாகவோ ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அந்தப் பெண்ணின் நிலை என்ன ஆனது என்று இதுவரை தெரியவில்லை என்றும், சில நாட்களில் ரவுடி ரிச்சர்ட்டும் கொலை செய்யப்பட்டதாகவும் கூறுகிறார்கள். அதேபோல ஜக்கியின் மனைவியை இவரே கொலை செய்து விட்டார் என்று வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளபோது, பல ஆண்டுகளுக்கு முன்பே மத்திய புலனாய்வுத் துறை மூலமாக தேடப்படும் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இதையெல்லாம் அறிந்த பத்திரிகை நிருபர்கள் நேரம் வரும் போது ஜக்கியிடம் இதுபற்றி கேள்வி கேட்க வேண்டும் என இருந்த நிலையில்....

கோவை மாநகரில், மாநகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி. மைதானத்தில் கடந்த 13.12.2011 அன்று ஆனந்த அலை மகா சத் சங் நிகழ்ச்சியில் ஜக்கி வாசுதேவ் கலந்து கொள்ள வரவிருப்பதாகவும், இது குறித்து கோவை வெஸ்ட் பிரஸ் வளாகத்தில் அன்று மாலை 5.30 மணியளவில் அனைத்து பத்திரிகையாளர்களையும் நேரில் சந்தித்து விளக்கமளிக்க இருப்பதாகவும் தெரிவிக்கிறார்கள்.

சுமார் 25 பத்திரிகையாளர்கள் கலந்து கொண்ட அந்தச் சந்திப்பில் மாதம் இரு முறை வெளிவரும் ‘ஆயுதம்’ இதழின் செய்தியாளராக பணியாற்றி வந்த மூத்த பத்திரிகையாளர் எஸ். பூபதி கண்ணன் என்பவர் ஜக்கியைப் பார்த்து கீழ் வரும் கேள்விகளை சரமாரியாக கேட்கத் துவங்கினார். அதன் விவரம்:

1. உங்கள் யோகா மையத்தில் வெளிநாட்டில் தேடப்பட்டு வரும் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது உண்மையா?
2. மேலும் யோகா மையத்திற்குள்ளும் உங்கள் வளாகத்தைச் சுற்றி உள்ள ஒரு சில இடங்களிலும் வெளிப்புற மரங்களிலும் இரகசிய கேமிரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதாகவும்

4 ஆம் பக்கம்

# ஜியார்ஜியாவில் மரணதண்டனைக்குள்ளான அப்பாவி ‘கருப்பர்’

அமெரிக்காவில் ஜியார்ஜியாவில் கடந்த செப்.21 ஆம் தேதி 42 வயது அமெரிக்க-ஆப்பிரிக்க இளைஞர் (கறுப்பர்) மரண தண்டனை விதிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவில் மரண தண்டனை தொடர்பான கடும் விவாதங்கள் தொடங்கியுள்ளன. இந்த தண்டனை குறித்து, இந்திய ஊடகங்கள் திட்டமிட்டு இருட்டடிப்பு செய்துவிட்டன. மரண தண்டனைக்குள்ளான அந்த இளைஞரின் பெயர் டிராய் டேவிஸ். 1989 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் தேதி ஓட்டல் விடுதி ஒன்றின் கார் நிறுத்தப் பகுதியில் நடந்த தகராறில் காவல்துறையில் பணியாற்றிய ஒரு இளைஞரை சுட்டுக் கொன்றதாக, இவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சுட்டுக் கொல்லப்பட்ட காவல்துறையில் வேலை செய்த வெள்ளைக்கார இளைஞரின் பெயர் மேக் பாயில் என்பதாகும். அப்போது அவருக்கு வயது 27.

டிராய் டேவிஸ் 20 வயதிலேயே பள்ளிப் படிப்பைத் தொடராமல் பல இடங்களில் வேலை செய்து வேலையைத் தொடராமல் விட்டவர். உணவு விடுதி கார் நிறுத்தத்தில் இவரைப் போல் சுற்றித் திரிந்த லேரி எங் என்ற இளைஞரோடு நடந்த தகராறில் மோதலை விலக்கச் சென்றார், காவல்துறையைச் சார்ந்த மேக்பாயில். அப்போது மேக்பாயில் சுடப்பட்டு அதே இடத்திலே இறந்தார். சுட்டவர் ட்ராய் டேவிஸ் தான் என்று காவல்துறை வழக்கு தொடர்ந்தது. ஆனால், குற்றத்தைச் செய்தது இந்த இளைஞர்தான் என்பதற்கு உறுதியான சாட்சிகள் இல்லை. தகராறு நடந்தபோது உடனிருந்த ஒருவர், டேவிஸ் கையில் துப்பாக்கி (.38 துப்பாக்கி)இருந்ததைத் தான் பார்த்ததாகக் கூறியதுதான், வழக்கிற்கான ஒரே சாட்சியம். ஆனால் காவல் துறை துப்பாக்கியை அவரிடமிருந்து பறிமுதல் செய்யவில்லை. சில துப்பாக்கிக் குண்டுகள் மட்டுமே கைப்பற்றப்பட்டன.

1989 ஆம் ஆண்டு வழக்கு விசாரணை நடந்தது. டேவிசுக்கு எதிராக காவல்துறை 30 சாட்சிகளைக் கொண்டு வந்தது. ஜியார்ஜியா நீதிமன்றம் சாட்சிகளின் சாட்சியத்தை ஏற்று டேவிசுக்கு மரண தண்டனை விதித்தது. வழக்கு 1993 இல் உச்சநீதிமன்றம் போனது. மீண்டும் புதிய விசாரணையைத் தொடங்க வேண்டும் என்று டேவிஸ் மனு செய்தார். உச்சநீதிமன்றம் டேவிஸ் கோரிக்கையை ஏற்கவில்லை. உச்சநீதிமன்றம் வழக்கை பெடரல் மாவட்ட நீதிமன்றத்தின் விசாரணைக்கு திருப்பி அனுப்பி விட்டது. 2010 ஜூன் மாதம் பெடரல் மாவட்ட நீதிமன்ற விசாரணையில் டேவிசுக்கு எதிராக ஏற்கனவே சாட்சியமளித்தவர்களில் 9 பேர் காவல்துறை நிர்ப்பந்தம் காரணமாகவே தாங்கள் டேவிசுக்கு எதிராக பொய் சாட்சி கூறியதாகத் தெரிவித்தனர். மரண தண்டனைகளை மறுபரிசீலனை செய்ய அமெரிக்காவில் தனி வாரியம் ஒன்று செயல்படுகிறது. ‘மாநில பரோல் வாரியம்’ என்று அதற்குப் பெயர். இந்த வாரியத்தில் பொது மக்களும், குற்றவாளிகள் தொடர்பாக, தங்கள் கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். டேவிசுக்கு மரண தண்டனை வழங்கக்கூடாது என்று 60,000 பொது மக்கள் வாரியத்திடம் மனு தாக்கல் செய்தனர். சுட்டவர் டேவிஸ்தான் என்பதை உறுதிப்படுத்தும் ஒரு சாட்சிகூட இந்த வழக்கில் கிடையாது. டேவிஸ் சுடுவதற்கான காரணம் என்ன? அதற்கான உள்நோக்கம் என்ன? என்பதற்கும் எந்த காரணமும் நீதிமன்றம் முன்



3 ஆம் பக்கம்

## தலையங்கம்

# பாகிஸ்தான் 'கோட்சே'க்கள்

மதம் – மக்களைப் பண்படுத்துவதற்கா? அல்லது மனித நேயத்தை சிதைத்து மக்களை வெறியூட்டுவதற்கா? குறிப்பாக மதம் – அரசியல் ஆயுதமாக்கப்படும்போது இரண்டாவதாகக் குறிப்பிட்ட வெறிதான் தலைதூக்கி நிற்கிறது. அதற்கு எந்த மதமும் விதிவிலக்கு அல்ல. இப்போது தூக்குத் தண்டனைக்கு எதிராக மனித உரிமைக் குரல் ஓங்கி ஒலித்து வருகிறது. இதில் அமெரிக்கா போன்ற நாடுகளில் கருப்பின மக்களுக்கு எதிரான இன வெறுப்பு நீதிபதிகளை ஆட்டிப் படைக்கிறது. பாகிஸ்தான் போன்ற நாடுகளில் மதவெறி 'மரணத்தை'த் தம் கைகளில் ஏந்திக் கொண்டு தாண்டவமாடுகிறது.

பாகிஸ்தானில் பஞ்சாப் மாநிலத்தில் ஆளுநராக இருந்த சல்மான் தசீர் பாகிஸ்தானில் முஸ்லீம் அல்லாத சிறுபான்மையர்களின் நியாயமான உரிமைக்குக் குரல் கொடுத்தார். சிறுபான்மையினர் உரிமைகளை அச்சுறுத்தக்கூடிய சட்டங்களை எதிர்த்தார் என்பதற்காக ஒரு போலீஸ்காரர் அவரை சுட்டுக் கொன்று விட்டார். மதவெறி பிடித்த அந்த போலீஸ்காரரின் பெயர் மும்தாஸ் குவாத்ரி. கடந்த ஜனவரி 4 ஆம் தேதி கைது செய்யப்பட்ட குவாத்ரி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோது இவ்வாறு கூறினார்:

"ஆம் அந்த ஆளுநரை நான்தான் சுட்டேன்; அது எனது மதத்தின் கடமை" – இதுதான் அவரின் ஒப்புதல் வாக்கு மூலம். "இஸ்லாம் மதத்தைப் புண்படுத்திவிட்டார்" என்ற குற்றச்சாட்டின் கீழ் பாகிஸ்தான் நாட்டின் 'மதப் பாதுகாப்பு' சட்டத்தின் கீழ் (Blasphemy laws) –ஒரு கிறிஸ்துவப் பெண்ணுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதை மனித உரிமைப் பார்வையில் எதிர்த்ததுதான், பஞ்சாப் ஆளுநர் சல்மான் நசீர் செய்த "ஒரே குற்றம்". 'இவ்வளவு மோசமான சட்டங்களை, ஒரு நாடு வைத்திருக்கக் கூடாது; அவை திருத்தப்பட வேண்டும்' என்றார் அவர். அதற்காகவே மதவெறியின் துப்பாக்கிக் குண்டுக்கு பலியானார்.

இப்போது குவாத்ரிக்கு அந்நாட்டு நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து விட்டது. இதை எதிர்க்கும் மதவெறி சக்திகள் "ஒரு குவாத்ரியை தூக்கிலிட்டால் ஆயிரம் குவாத்ரிகள் உருவாவார்கள்" என்று வீதிக்கு வந்து முழக்கமிட்டு வருகிறார்கள். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவுடன் 'குரானி'லிருந்து சில பகுதிகளைப் படித்துக் காட்டிய அவர், 'தாம் மேல்முறையீட்டுக்குப் போகப் போவதில்லை என்றும், தமது உயிரை மதத்துக்காக தியாகம் செய்யப் போவதாகவும்' கூறியுள்ளார். குவாத்ரிக்காக நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர் 'இந்த வழக்கை சட்டத்தின் பார்வையில் நடத்தாமல், மதத்தின் பார்வையில் நடத்த வேண்டும்' என்று வாதாடியிருக்கிறார். 'குவாத்ரிக்கு மரணதண்டனை வழங்கினால் நீதிபதிக்கும் மரண தண்டனை வழங்குவோம்' என்ற மதவெறி சக்திகள் மிரட்டிய நிலையிலும் நீதிபதி தூக்கு தண்டனையை அறிவித்து விட்டார்.

பஞ்சாப் ஆளுநர் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, அவர் முன் வைத்த நியாயமான மனித உரிமைக் குரலை பாகிஸ்தானின் சிறுபான்மைத் துறை அமைச்சரான ஷபாஸ் பாட்டி என்பவரும் தொடர்ந்து வலியுறுத்தினார். பாகிஸ்தான் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள ஒரே கிறிஸ்தவர் இவர்தான். ஆனால், மதவெறி சக்திகளின் கொலை மிரட்டலால், இவர், தனது உரிமைக் குரலை வலியுறுத்தாமல், அமைதியாக்கிக் கொண்டார். அதன் பிறகு, அண்மையில் "இறைத் தூதரின்" பெயரைத் தவறாக உச்சரித்துவிட்டார் என்ற "குற்றத்துக்காக" 13 வயது கிறிஸ்துவ மாணவி, பள்ளியிலிருந்தே வெளியேற்றப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கையும் பாகிஸ்தானில் அமுலில் உள்ள மதப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தான் எடுக்கப்பட்டுள்ளது.

"கோரப் பற்களைக் கொண்டுள்ள இந்த சட்டம் திருத்தப்பட வேண்டும்" என்ற கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளதோடு, நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டத்துக்கு திருத்தம் கொண்டு வந்த உறுப்பினரும், இப்போது கொலை மிரட்டலுக்கு உள்ளாகியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

மனித உரிமைக்கு எதிராக தூக்குத் தண்டனைகளும், மத வெறியும் கைகோர்த்து நிற்கும்போது,நிலைமை மிக மோசமாகி விடுகிறது. ஆளுநரை மதவெறியால் சுட்டுக் கொன்ற மும்தாஸ் குவாத்ரிகளின் மதவெறியை நாம் கடுமையாக எதிர்க்கும் அதே நேரத்தில் அவருக்கு வழங்கப்பட்ட மரணதண்டனையையும் எதிர்க்கிறோம். 'கொலைக்கு கொலை' என்பது அரசுகளின் சட்டங்களாகிவிடக் கூடாது. அதேபோல் பாகிஸ்தானின் இத்தகைய கொடூரமான மதவெறிச் சட்டங்களும் கடும் கண்டனத்துக்கு உரியவையே! நம்மைப் பொறுத்தவரை 'மும்தாஸ் குவாத்ரி' பாகிஸ்தான் 'கோட்சே' என்ற முடிவுக்கே வர முடிகிறது.

மரணத்தின் மிரட்டல்களுக்கும் எதிராக மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கும் பாகிஸ்தானின் 'சல்மான் தசீர்களின்' துணிவை பாராட்ட வேண்டும்.

மதவெறியும் மரணதண்டனையோடு சேர்ந்து விடை பெற்றாக வேண்டும்!

# பேரறிஞர்கள் வீட்டுப் பெண்களின் நிலையும் இது தானே!

**பெரியார்**

பெண்கள் உரிமைக்கும், மதவேறுபாடு களுக்கும் எதிராக உழைத்த 3 பெண்களுக்கு நோபல் பரிசு கிடைத்துள்ள நிலையில் தந்தை பெரியாரின் ஆழமான பெண்ணுரிமை சிந்தனையை வெளியிடுகிறோம்.

பெண்கள் மனித சமுதாயத்தில் சரி பகுதி எண்ணிக்கை கொண்டவர்கள். இரண்டொரு உறுப்பில் மாற்றம் அல்லாமல், மற்றபடி பெண்கள் மனித சமுதாயத்தில் ஆண்களுக்கு முழு ஒப்பும் உவமையும் கொண்டவர்கள் ஆவார்கள் என்பேன். நாமும் அவர்களைச் சிசு குழந்தைப் பருவ முதல் ஓடி விளையாடும் பருவம் வரையில் கொஞ்சி, முத்தங்கள் கொடுத்து, பலவிதத்தும் பேத உணர்ச்சியே அற்று, ஒன்றுபோலவே கருதி நடத்துகிறோம், பழகுகிறோம். அப்படிப்பட்ட மனித ஜீவன்கள் அறியும் பக்குவமும் அடைந்தவுடன், அவர்களைப் பற்றி இயற்கைக்கு மாறான கவலை கொண்டு, மனித சமுதாயத்தில் வேறாக்கி, கடைசியாக ஒரு பொம்மையாக்கி, பயனற்ற ஜீவனாக மாத்திரமல்லாமல், அதைப் பெற்றோருக்கு ஒரு தொல்லையான 'பண்டமாக' ஆக்கிக் கொண்டு, அவர்களது வாழ்வில் அவர்களை அவர்களுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் கவலைப்படத்தக்க ஒரு 'சாதனமாய்ச்' செய்து கொண்டு, அவர்களைக் காப்பாற்றவும், திருப்திப்படுத்தவும் அலங்காரப்படுத்தி திருப்தியும், பெருமையும் அடையச் செய்ய வேண்டியதுமான ஓர் அஃறிணைப் பொருளாகவே ஆக்கி வருகிறோம்.

பெண்களால் வீட்டிற்கு, சமுதாயத்திற்குப் பலன் என்ன? எங்கு கெட்டப் பேர் வந்து விடுகிறதோ என்பது தானே? இன்று பெண்கள் வேலை என்ன? ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணாய் அமைப்பது. அது எதற்கு? ஆணின் நலத்துக்குப் பயன்படுவதற்கும், ஆணின் திருப்திக்கும், ஆணின் பெருமைக் கும், பெண் ஒரு உபகருவி என்பதல்லாமல் வேறு என்ன? ஓர் ஆணுக்கு ஒரு சமையல் காரி; ஓர் ஆணின் வீட்டிற்கு ஒரு வீட்டுக்காரி; ஓர் ஆணின் குடும்பப் பெருக்குக்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை; ஓர் ஆணின் கண் அழகிற்கும், மனப் புளகாங்கிதத்திற்கும் ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல், பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள்; பயன்படுத்தப்படுகிறார்கள்?

இது என்ன நியாயம்? மனித சமுதாயம் தவிர மற்றபடி மிருகம், பட்சி, பூச்சி, ஐந்து முதலியவைகளில் வேறு எந்த ஜீவனாவது, 'ஆண்களுக்காகவே இருக்கிறோம் நாம்' என்ற கருத்துடன், நடத்தையுடன் இருக்கிறதா?

இந்த இழிநிலை பெண்களுக்கு அவமானமாய்த் தோன்றவில்லை என்பதற்காகவே, ஆண்கள் பெண்களை இவ்வளவு அட்டூழியமாக நடத்தலாமா என்று கேட்கிறேன். ஓர் ஆண் ஒரு பெண்ணைத் தனது சொத்து என்று எண்ணுகிறானே - எதனால்? துணியாலும் நகையாலும் தானே! கம்பி இல்லாத தந்தியும், ரேடியோவும், அணுகுண்டும் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் காலத்திலும் பெண்கள் அலங்காரப் பொம்மைகளாக இருப்பதா?

நம் 'பெண்கள் உலகம்' பெரிதும் மாற்றமடைய வேண்டும். நம் பெண்களைப் போல், பூமிக்குப் பாரமானவர்கள் - மனிதனுக்குத் தொல்லையானவர்கள் - நல்ல நாகரிகமான வேறு நாடுகளில் கிடையாது. இங்கு படித்த பெண், படியாத பெண் எல்லோரும் பொம்மைகளாகவே இருக்கிறார்கள். பெற்றோர்களும், கணவன்மார்களும் அவரவர்களது பெண்களை அழகிய பொம்மைத் தன்மையை உடையவர்களாக ஆக்கி அதைக் கொண்டே திருப்தி அடைகிறார்கள்; பெருமையடைகிறார்கள். பெண்களைத் திருப்தி செய்ய அவர்களை நல்ல பெண்களாக ஆக்க, விலையுயர்ந்த நகையும், துணியும் கொடுத்து, அழகிய சிங்காரப் பதுமையாக்கி விட்டால் போதும் என்று நினைக்கிறார்கள்.

பெண்கள் பெருமை, வருணனை ஆகியவைகளில் பெண்கள் அங்கம், அவயவங்கள், சாயல் ஆகியவைகளைப் பற்றி 50 வரி இருந்தால், அவர்களது அறிவு, அவர்களால் ஏற்படும் பயன், சக்தி திறமைப் பற்றி ஒரு 5 வரிகூட இருக்காது. பெண்களின் உருவை அலங்கரிப்பது, அழகை மெச்சுவது, சாயலைப் புகழ்வது ஆகியவைகள் பெண்கள் சமுதாயத்திற்கு அவமானம், இழிவு, அடிமைத் தனம் என்பதை ஆயிரத்தில் ஓர் பெண்ணாவது உணர்ந்திருக்கிறாள் என்று சொல்ல முடியுமா?

பெண்களுக்குத் தகப்பன் சொத்தில் உரிமை கிடையாதது ஏன் என்று எந்தப் பெண்ணாவது காரணம் கேட்டாளா? "பெண்களை அனுபவிக்கிறவன் - அவர்களிடம் வேலை வாங்கிப் பயன் அடைகிறவன் காப்பாற்ற மாட்டானா!" என்பதுதான். அதற்கேற்ற நகை அணி ஆகியவையாகும்.

"பெண்களுக்கு, மக்கள் கவனத்தை ஈர்க்கும்படியான நகை, துணிமணி, ஆபரணம் ஏன்?" என்று எந்தப் பெண்ணாவது பெற்றோராவது, 'கட்டினவ'ராவது சிந்திக்கிறார்களா? பெண்கள் அஃறிணைப் பொருள் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? தன்னை அலங்கரித்துக் கொண்டு மற்ற மக்கள் கவனத்தைத் தம்மீது திருப்புவது இழிவு என்றும், அநாகரிகம் என்றும் யாருக்கும் தோன்றாததற்குக் காரணம், அவர்கள் போகப் பொருள் என்ற கருத்தேயாகும். இது பரிதாபமாகவே இருக்கிறது.

நல்ல கற்புடைப் பெண்களுக்கு உதாரணம், "மற்றொருவர் உள்ளம் புகாள்" என்பது திராவிட மரபு நூற்களின் கூற்று. அதாவது, ஒரு பெண் இயற்கையில் கற்புடையவளாயிருந்தால் தன் கணவன் தவிர மற்றவர்கள் நினைவுக்குக்கூட ஆளாக மாட்டாள் - "பிறர் நெஞ்சு புகாள்" என்பதாகும். நாம் நம் பெண்ணை மற்றவர்கள் எப்படிப் பட்டவர்களாயினும், 150 தடவை திரும்பித் திரும்பிப் பார்க்கும்படி, அவர்கள் கவனத்தை நம்மீது திரும்பும்படி அலங்கரிக்கிறோம். அலங்கரிக்க அனுமதிக்கிறோம். அதில் நம் பணம், உழைப்பு, நம் வாழ்க்கைப் பயன் முதலியவைகளைச் செலவழிக்கிறோம். இது ஏன், எதற்காக என்று சிந்திக்காததால் - அதைத் தவிர வேறு காரியத்திற்கு நம் பெண்கள் பயன்படாமல் போய்விட்டார்கள்.

நான் பாமர மக்களை மாத்திரம் சொல்லவில்லை. நம் அறிஞர், செல்வர், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரானவர்கள் என்று சொல்லப்படும் பெரியோர்களின் யோக்கியதைகளையும், அவர்கள் பெண்கள் உலகத்துக்கு ஆற்றும் தொண்டுகளைப் பற்றியுமே சொல்லுகிறேன்.

திராவிடப் பேரறிஞர்களின் மனைவிகள், தங்கை, தமக்கைகள், பெண்கள் எங்கே, எப்படிப் பிறந்தார்கள்? எப்படி வளர்ந்தார்கள்? எப்படித் தகுதி ஆக்கினார்கள்? எப்படி இருக்கிறார்கள்? ஷராப்புக் கடைகள், ஜவுளிக் கடைகள் ஆகியவற்றில் விளம்பரத்திற்கு வைத்திருக்கும் அழகிய பொம்மைகள், உருவங்கள் போலல்லாமல் - நாட்டுக்கு, மனித சமுதாயத்திற்கு, பெண்கள் உலகத்திற்கு இவர்கள் என்ன மாதிரியில் தொண்டாற்ற அல்லது தாங்களாவது ஒரு புகழே, கீர்த்தியோ பெறத்தக்கபடி வைத்தார்களா? இவர்களே இப்படி இருந்தால் - மற்ற பாமர மக்கள், தங்கப் பெட்டியின் உள்ளே வெல்வெட் மெத்தைப் போட்டுப் பூட்டித்தானே வைப்பார்கள்!

(திருப்பத்தூரில் 15.9.1946 இல் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி)

- 'குடி அரசு' 21.9.1996

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (2)

*ராஜீவ் காந்தி ஈழத்துக்கு அனுப்பி வைத்த இந்திய ராணுவம் 1987 ஆம் ஆண்டில் நிகழ்த்திய போர்க் குற்றங்கள், இனப் படுகொலைகள் பற்றிய ஒரு தொகுப்பு:*

**15.10.87**

இன்று சிங்கள இராணுவத்தால் நடமாட முடியாத இடங்களிலெல்லாம் ஆட்லரி செல் விழுந்து வெடித்தது. இந்தியப் படையினர் கண்மூடித் தனமாகச் செல் அடித்ததனால் ஏராளமான பொது மக்கள் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் உள்ளனர். பாதிக்கப்பட்ட ஏராளமான மக்கள் வீதியோரங்களிலும், மர நிழலிலும் தங்கியுள்ளனர். இவ்விடங்களில் ஏராளமான பெண்களை இந்தியப் படையினர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர். இதில் 11 பெண்களது சடலங்கள் ஒரு அறையினுள் காணப்பட்டன. உடைகள் இல்லாத நிலையில் பெண்களின் சில உறுப்புகள் வெட்டப்பட்டும், மனிதப் பல் அடையாளங்கள் காணப்பட்ட நிலையிலும் இருந்தன. (இதில் திருமணமான பெண்களும் அடங்குவர்) 40 பெண்களை இந்தியப் படையினர் இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பின்னர் கவச வாகனத்தால் அடையாளம் தெரியாதவாறு நெரித்துக் கொன்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சந்திவெளி என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் 3 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர். இவர்கள் வந்த டிரக் முற்றாகச் சேதமடைந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மயிலம் வெளியில் தமிழர்களின் 300 வீடுகளை எரித்த இந்தியப் படையினர் அங்குள்ள சர்வோதயத்தில் இருந்த 25 அப்பாவித் தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர். இதே இடத்தில் விடுதலைப் புலிகள் இவர்கள் மீது மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் 24 இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களின் டிரக் வண்டி முற்றாகச் சேதமுற்றது.

கிரான், வாழைச்சேனை, சந்திவெளி, முறக் கொட்டாஞ் சேனை, வந்தாறு மூலை ஆகிய இடங்களில் இந்தியப் படையினர் ஏராளமான இளம் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதுடன் அவர்களது உடைகளைக் களைந்து வீதியில் நிர்வாணமாக நடக்க வைத்து, நிற்க வைத்து அவமானப்படுத்தியுள்ளது.

கொக்கட்டிச் சோலை என்னும் இடத்தில் தேடுதல் நடத்திய இந்தியப் படையினர் இரு அப்பாவிப் பொது மக்களைக் கொன்றுள்ளனர்.

முறக்கொட்டாஞ்சேனை ரெயில் நிலைய அதிபர் சுப்பிரமணியம், சந்திவெளி பேக்கரி உரிமையாளர் ராம் ஆகியோரது வீடுகள் உட்பட ஏராளமான தமிழர்களது வீடுகளில் நகைகள், பணம் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். பேக்கரி உரிமையாளர் வீட்டில் 28 ஆயிரம் ரூபாய் பணத்தையும், இரண்டு தங்க மாலைகளையும் எடுத்துள்ளனர்.

மாலை 2 மணியளவில் தெல்லிப்பழைக்கும் மல்லாகத்துக்கும் இடையில் வைத்து இந்திய அமைதி காக்கும் படையினரின் செயின் கவச வாகனத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் வண்டி பாவிக்க முடியாத அளவுக்குச் சிதறியது. அதன் சில பாகங்களை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றனர்.

15 ஆம் தேதி மாலை 5.30 மணியளவில் முறிகண்டியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் 6 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். சாவகச்சேரி புதுக்காட்டுச் சந்தியிலும் 6 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர்.

14,15 ஆம் தேதிகளில் நாவற்குழி முகாமிலிருந்து வெளியே வந்த இந்திய அமைதி காக்கும் படையினர் மீது விடுதலைப் புலிகளால் 6 தடவையாக மேற் கொள்ளப்பட்ட "கிளைமர்" கண்ணிவெடித் தாக்கு தல்களினால் இந்திய அமைதி காக்கும் படையினர் பலத்த இழப்புக்களுடன் முகாம் திரும்பினர்.

15 ஆம் தேதி நடைபெற்ற மோதலின்போது ஜேம்ஸ், பீரிஸ் ஆகிய இரு விடுதலைப் புலிகள் இயக்க வீரர்கள் வீர மரணமடைந்தனர்.

**16, 17.10.87**

16,17 ஆம் தேதிகளில் மட்டக் களப்பில் இந்திய அமைதி காக்கும் படையினரால் 10 இளம் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர். இவர்களில் 7 பேர் மரணமடைந்துள்ளனர். மீதி மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் உடல்களில் ஏராளமான காயங்கள் காணப்பட்டன. மேலும் சில பெண்களைக் காணவில்லை. இப்பகுதிகளில் இருந்த தமிழர்களின் 200 வீடுகளை இந்திய அமைதி காக்கும் படையினர் தீ வைத்துக் கொளுத்தினர். இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் இந்தியப் படையினருக்கு பெருத்த இழப்பு ஏற்பட்டது.

17 ஆம் தேதி கல்லுண்டா வெளியில் நடைபெற்ற மோதலில் 36 இந்தியப் படையினர் கொல்லப் பட்ட னர். ஒரு ஜீ.பி.எம்.ஜீ. உட்பட பல ரைபிள்களையும், 10,000-க்கும் மேற்பட்ட ரவைகளையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். கோப்பாயில் நடந்த சண்டையில் ஒரு மோட்டாரும், ஆறு செல்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன. 16 ஆம் தேதி நடைபெற்ற மோதலின்போது விடுதலைப் புலிகளின் தரப்பில் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த காப்டன் அசோக் வீரமரணமடைந்தார்.

உரும்பிராய்ப் பகுதியில் இந்திய அமைதி காக்கும் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலில் அப்பகுதியைச் சேர்ந்த வாழைத் தோட்டங்கள் மற்றும் பயிர்கள் எல்லாம் முற்றாக அழிந்துவிட்டன. செயின் கவச வாகனங்களைத் தோட்டங்களுக் கூடாகச் செலுத்தி பயிர்களையெல்லாம் நாசம் செய்த இந்திய அமைதி காக்கும் படையினர் 14 இளம் பெண்களைப் பிடித்துச் சென்றனர். இந்திய அமைதி காக்கும் படையினரின் அராஜகத்தை எதிர்த்து வீரப் போர் புரிந்து வரும் விடுதலைப் புலிகள் அவர்களிட மிருந்து பறித்தெடுத்த ஆயுதங்களையும், ரவைகளை யும் வைத்தே தொடர்ந்து போராடுகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் கிரான், கொம்மாந்துறை, சம்பு வெளி, சித்தாண்டி ஆகிய இடங்களில் தமிழர்களின் மீது தாக்குதல் நடத்தியதுடன், அப்பகுதிகளில் இருந்த 50-க்கும் மேற்பட்ட தமிழர்களின் வீடுகளையும் எரித்தனர். அவர்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர். கண்ணுமுனை என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலில் 24 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். ரவைகள் நிரம்பிய 3 எல்.எம்.ஜீ. மகசீன்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

17 ஆம் தேதி இரவு உரும்பிராயில் 16 இளம் பெண்களை இந்திய அமைதி காக்கும் படையினர் பிடித்துச் சென்றனர்.

(தொடரும்)

---

முதல் பக்கத் தொடர்ச்சி

வைக்கப்படவில்லை. பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கியும் பறிமுதல் செய்யப்படவில்லை. தடய அறிவியல் சோதனைகளும் டேவிசை குற்றவாளி என்று உறுதிப்படுத்தவில்லை. பெரும்பாலான சாட்சிகள் தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டு, டேவிசுக்கு ஆதரவாக திரும்பியதையும் நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ள தயாராக இல்லை.

"எனக்கு எழுதப்படிக்கவே தெரியாது; ஆனால், போலீசார் என்னிடம் இந்த வழக்கில் என்னுடைய சாட்சி வாக்குமூலத்தை எழுதிக் கொண்டு கையெழுத்துப் போடச் சொன்னார்கள்" என்று, ஒரு சாட்சி நீதிபதி முன் கூறினார். அதையும் நீதிமன்றம் பரிசீலிக்க தயாராக இல்லை. கடைசியாக உடற்கூறு பரிசோதனை (DNA)க்கு குற்றவாளிகளை உட்படுத்தும் முறை அமெரிக்காவில் இருக்கிறது. இத்தகைய பரிசோதனையால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்கப்பட்டு அமெரிக்காவில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் ஜியார்ஜியா மாவட்டத்தின் சட்டம் 'டி.என்.ஏ.' பரிசோதனைக்கு அனுமதிக்காமலே தூக்கிலிடலாம் என்று கூறுவதால், நீதிபதிகள், 'டி.என்.ஏ.' சோதனைக்கு உத்தரவிடவில்லை. டேவிசுக்கு வாதாடிய வழக்கறிஞர் தனது வாதத்தை திறமையாக முன் வைத்திருந்தால் டேவிஸ் விடுதலையாகியிருப்பார் என்ற கருத்தும் உண்டு.

இவ்வளவுக்குப் பிறகு டேவிசுக்கு கடந்த செப்டம்பர் 21 ஆம் தேதி விஷ ஊசி போட்டு மரணதண்டனையை நிறைவேற்றிவிட்டார்கள். டேவிசின் இறுதி கோரிக்கை மனுவை நீதிபதிகள் 3 மணி நேரம் பரிசீலித்து நிராகரித்தவுடன், அடுத்த ஒரு மணி நேரத்திலேயே ஜார்ஜியா மாநிலம் ஜாக்சன் நகருக்கு அருகே உள்ள விசேட சிறைக்கூடத்தில் (Georgia Diagnostic and Classification Prision) சிறை அதிகாரிகள் அவருக்கு விஷ ஊசியை ஏற்றிவிட்டனர். விஷ ஊசி தன் மீது ஏற்றப்படும் கடைசி நிமிடம் வரை 'நான் நிரபராதி' என்றே உறுதியுடன் கூறினார் டேவிஸ். ஆனால் வெள்ளை நிறவெறி, கருப்பரின் உயிரை மாய்ப்பதில் உறுதியாகவே இருந்து விட்டது.

தமிழ்நாட்டின் காவல் துறை இயக்குனராக பணியாற்றி ஓய்வு பெற்ற ஆர்.கே. ராகவன், 'பிரண்ட் லைன்' ஏட்டில் (அக்.21) தூக்குத் தண்டனைக்கு எதிராக 'நீதிமன்றக் கொலை' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் இந்த அமெரிக்க சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதுபோல் அப்பாவிகள் தூக்கிலிடப்பட்டு விடுகிறார்கள். அப்சல் குருவுக்கும், முருகன், சாந்தன், பேரறிவாளனுக்கும் இதுபோல் நிகழ்ந்துவிடக் கூடாது என்று கூறும் அவர், மக்கள் பிரதிநிதிகளுக்கு அரசியல் காரணமாக ஏற்படும் சலனங்களுக்கும், சபலங்களுக்கும், மனித உயிர்கள் பலியாகி விடக்கூடாது என்று எழுதியுள்ளார்.

## 3 பெண்ணுரிமைப் போராளிகளுக்கு நோபல் பரிசு

லைபீரிய முன்னாள் ஜனாதிபதி எல்லன் ஜான் சன் சர்லீஃப், லைபீரிய சமாதான ஆர்வலர் லீமா போவி மற்றும் ஏமன் நாட்டைச் சேர்ந்த போராளி தவாக்கல் கர்மான் ஆகிய 3 பெண்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வெள்ளியன்று அறிவிக்கப்பட்டது.

பெண்களின் பாதுகாப்பு மற்றும் பெண்களின் உரிமைக்காகப் போராடிய இம் மூன்று பெண்மணிகளின் அமைதிப் போராட்டம் மற்றும் சமாதானத்தைப் பேணுவதற்காக ஆற்றிய செயல்களுக்காகவும் இம்மூவருக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளுக்காகப் போராடிய பத்திரிகையாளரும், 3 குழந்தைகளுக்குத் தாயுமான 32 வயது கர்மான், ஏமன் அதிபர் அலி அப்துல்லா சலே தலைமையிலான அரசை எதிர்த்து நடைபெற்றுவரும் போராட்டத்திற்கு தலைமையேற்ற பெண் என்பது குறிப்பிடத்தக்கது

நோபல் பரிசை வென்றதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பரிசை ஏமனின் எழுச்சி இளைஞர்களுக்கும் ஏமன் மக்களுக்கும் சமர்ப்பிக்கிறேன் என்று பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கர்மான் தெரிவித்தார். அரபு உலகில் எழுச்சி பரவ கர்மானின் செயல்பாடுகளே காரணம் என்று நோபல் பரிசுக் கமிட்டியின் தலைவரான தோர்போர்ன் ஜக்லேண்ட் தெரிவித்தார்.

ஆப்பிரிக்காவின், லைபீரியாவைச் சேர்ந்த எல்லன் ஜான்சன் சர்லீஃப் (72), ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் பயின்ற அறிஞராவார். ஆப்பிரிக்க வரலாற்றில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் அதிபராவார். சர்லீஃப் ஒரு சமூக சீர்திருத்தவாதியாவார். அவர் பதவியேற்றது முதல் அமைதியை ஏற்படுத்துவதற்காகப் போராடி வருகிறார். மக்களின் சமூக, பொருளா தாரத் தரத்தை உயர்த்துவதற்காகவும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் போராடி வருகிறார்.

லைபீரியாவைச் சேர்ந்த லீமா போவி, இனரீதியாகவும் மத ரீதியாகவும் மக்களைப் பிரித்த தீவிரவாதத் தலைவர்களுக்கெதிராக, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் பெண்களை ஒருங்கிணைத்துப் போரிட்டவராவார். தேர்தலில் பெண்கள் பங்கேற்பதை உறுதி செய்த தீர மிக்க போராளியாவார்.

**(பெண்ணுரிமை பற்றிய பெரியார் கட்டுரை 2 ஆம் பக்கத்தில்)**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# செப் 17: உடுமலை மடத்துக்குளத்தில் இரு சக்கர வாகனப் பேரணி

உடுமலையில் மரண தண்டனை ஒழிப்புப் பிரச்சாரப் பயண தொடக்கப் பொதுக் கூட்டம் நடந்தது.

பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் மரண தண்டனை ஒழிப்புப் பிரச்சாரப் பயணம் சென்னையிலிருந்தும் உடுமலைப் பேட்டையிலிருந்தும் தொடங்கியது. 28.9.2011 அன்று உடுமலையில் பயணம் தொடங்கியது. அதற்கு முதல் நாளான 27.9.2011 செவ்வாய் மாலையில் தொடக்கப் பொதுக் கூட்டம் உடுமலைப் பேட்டை வெங்கடகிருஷ்ணா ரோட்டில் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக திருப்பூர் மாவட்டச் செயலாளர் கா. கருமலையப்பன் வரவேற்புரையாற்றினார். உடுமலை நகர துணைச் செயலாளர் சு.சிவசங்கர், உடுமலை ஒன்றிய செயலாளர் கோ. விசுவநாதன் முன்னிலை வகித்தனர்.

ஆதரவு அமைப்புகளான கொங்கு மண்டல ஆய்வு மையம் இரா. ரவிக்குமார், புரட்சிப் புலிகள் மாவட்டச் செயலாளர் வி. முருகானந்தம், நாம் தமிழர் கட்சி நகர ஒருங்கிணைப்பாளர் பாபு, ஆதித் தமிழர் பேரவை பெரியார் தாசன், கொங்கு நாடு முன்னேற்றக் கழக மாவட்ட அமைப்பாளர்சண்முக இளங்கோவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நகர செயலாளர் மா.இரவிக்குமார், பாட்டாளி மக்கள் கட்சி இரா. காந்தி செல்வம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வட்டார செயலாளர் கே.சி. இராதாகிருஷ்ணன், மறுமலர்ச்சி தி.மு.க. மாவட்டச் செயலாளர் ஆர்.டி. மாரியப்பன், இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் கே. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

பின்னர் கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், திரைப்பட இயக்குனர் மணிவண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியில் உடுமலை நகரத் தலைவர் யாழ் நடராசன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.மனோகரன், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் ந. பிரகாசு, கோவை தெற்கு மாவட்டத் தலைவர் கலங்கல் வேலு, கோவை வடக்கு மாவட்டத் தலைவர் து.ராமசாமி, கோவை மாநகர் மாவட்டத் தலைவர் கோபால், பொருளாளர் ரஞ்சித் பிரபு, உடுமலை நகர பொருளாளர் மு.வேல்முருகன், மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் நா.ப.கதிரவன், ஒன்றியச் செயலாளர் சு.சிவானந்தம், ஒன்றிய துணைச் செயலாளர் மா. மோகன் குமார், காரத் தொழுவு அமைப்பாளர் கு. மயில்சாமி, சின்ன வீரம்பட்டி கிளைத் தலைவர் சு. தமிழ்வேந்தன் மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

தொடக்க நிகழ்ச்சியாக ஒரு மணி நேரத்திற்கும் மேலாக சிற்பி ராஜன் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சியை நடத்தினார். பொது மக்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியைப் பார்த்தனர்.

பெரியார் 133 ஆவது பிறந்த நாள் விழா மடத்துக்குளம், உடுமலை ஒன்றியங்களில் 25.9.2011 அன்று கொண்டாடப்பட்டது. 25.9.2011 அன்று காலை 9 மணிக்கு மடத்துக்குளம் ஒன்றியம் ருத்ராபாளையத்தில் தோழர் ரஹிம் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். தந்தை பெரியாரின் கருத்துகள் அச்சிடப்பட்ட துண்டறிக்கைகள் ருத்ராபாளையம் பகுதி முழுவதும் வழங்கப்பட்டது. பின் ருத்ராபாளையம் துரை இராஜேந்திரன் இல்லத்தில் புதிய தோழர்களின் அறிமுக நிகழ்வு நடைபெற்றது.

பின்பு அங்கிருந்து இரு சக்கர வாகனங்களில் தோழர்கள் கொழுமம் பகுதியை சென்றடைந்தனர். அங்கு தோழர்கள் பெரியார் பிறந்த நாள் துண்டறிக்கைகளை பகுதி முழுவதும் வழங்கினர். பின் வாகனப் பயணம் குமரலிங்கம் பகுதியை சென்றடைந்தது. அங்கும் பகுதி முழுவதும் தோழர்கள் துண்டறிக்கைகளை



வழங்கினர். அங்கிருந்து தொடங்கிய பயணம் மடத்துக்குளம் பகுதியை சென்றடைந்தது. மடத்துக்குளம் பகுதி முழுவதும் தோழர்கள் துண்டறிக்கைகள் வழங்கினர்.

அங்கிருந்து தொடங்கிய இரு சக்கர வாகனப் பயணம் உடுமலை நகரப் பகுதியை சென்றடைந்தது. உடுமலையில் தோழர் இரமேசு கழகக் கொடியை ஏற்றி வைத்தார். பகுதி முழுவதும் தோழர்கள் துண்டறிக்கைகள் வழங்கினர்.பின்பு பயணம் சின்னவீரன்பட்டியை அடைந்தது. அங்கு தோழர் தியாகு கழகக் கொடியை ஏற்றி வைத்தார். தோழர்கள் பகுதி முழுவதும் துண்டறிக்கைகள் வழங்கினர். பிறகு பயணம் இந்திரா நகர் பகுதியை சென்றடைந்தது. அங்கு தோழர் மதன்குமார் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். அங்கு பகுதி முழுவதும் தோழர்கள் துண்டறிக்கைகளை வழங்கினர்.

அங்கிருந்து தொடங்கிய பயணம் காரத்தொழுவு பகுதியை சென்றடைந்தது. காரத் தொழுவில் திலீபன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். பகுதி முழுவதும் தோழர்கள் துண்டறிக்கைகளை வழங்கினர். பின்பு பயணம் கணியூர் பகுதியை சென்றடைந்தது. கணியூர் பகுதி முழுவதும் பெரியார் கருத்துக்கள் அடங்கிய துண்டறிக்கைகளை தோழர்கள் வழங்கினர். பிறகு பயணம் ஜோத்தம்பட்டி கிராமத்தைச் சென்றடைந்தது. கிராமம் முழுவதும் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன.

அங்கிருந்து தொடங்கிய பயணம் கடத்தூர் பகுதியை சென்றடைந்தது. கடத்தூரில் அஜித் குமார் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். பகுதி முழுவதும் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. கடத்தூர் மணிகண்டன் இல்லத்தில் தோழர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. மதிய உணவிற்கு பின் புதிய தோழர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற நிகழ்வில் தோழர்கள் தங்கள் கருத்துகளை அனைத்து தோழர்களுடனும் பகிர்ந்து கொண்டனர். கடத்தூர் மணிகண்டன் உணவு ஏற்பாடுகளை மிகவும் சிறப்பாக செய்திருந்தார். கடத்தூர் நிகழ்வுடன் பயணம் முடிவடைந்தது.

பயணத்தில் மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் நா.ப. கதிரவன், ஒன்றிய செயலாளர் அ. சிவானந்தம், துணைச் செயலாளர் மா.மோகன்குமார், காரத்தொழுவு அமைப்பாளர் கு.மயில்சாமி, உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், நகரத் துணை செயலாளர் சு.சிவசங்கர், உடுமலை ஒன்றியச் செயலாளர் கோ. விசுவநாதன், ஒன்றிய பொருளாளர் வேல் முருகன், சின்னவீரன்பட்டி தமிழ் வேந்தன், உடுமலை இரமேசு, பூளவாடி சதீசுகுமார், அஜீத் குமார், இலட்சுமணன், ரஹிம், மதன் குமார், துரை. இராசேந்திரன், பீட்டர் முத்துராசு, கணியூர் திலீபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

முதல் பக்கத் தொடர்ச்சி

கூறப்படுகிறதே உண்மையா?

3. உங்கள் பெயரை ஜாவா வாசுதேவ் என்பது எப்போது ஜக்கி வாசுதேவாக மாற்றிக் கொண்டீர்கள்? இதுவும் உண்மையா?
4. மேலும் 1970 ஆம் ஆண்டு கோவை அவிநாசி ரோடு மேம்பாலத்தின் கீழ் கஞ்சா விற்றதாக கோவை காட்டூர் பி3 காவல் நிலையத்தில் வழக்கு உள்ளதாக கூறப்படுகிறது உண்மையா? என்று சங்கு சக்கரம் சுற்றுவதுபோல அடுக்கடுக்கான கேள்விகள் கேட்டபோது....

ஜக்கியின் முகம் மாறியது; கேட்ட கேள்விக்கு பதில் அளிக்காமல் உடனே ஜக்கி செய்தியாளரைப் பார்த்து, "உனக்கு மனநிலை பாதிக்கப்பட்டதுபோல உள்ளது. அதனால்தான் கேள்விகளை இப்படி கேட்கிறாய்" என்று கூற, சக பத்திரிகையாளர்கள் அதிர்ச்சியடைய - மீண்டும் ஜக்கியின் மனைவியின் சாவில் இருக்கும் கேள்விகளைக் கேட்டபோது, அருகில் இருந்த அவருடைய சீடர்களிடம் மௌனமாக ஜாடை காட்ட, 4 குண்டர்கள் செய்தியாளரை வெளியே தூக்கிக் கொண்டு வந்து ஒருவர் அவருடைய வலது கையை முறுக்கிக் கொண்டும், இன்னொருவர் அவருடைய பாக்கெட்டிற்குள் பத்திரிகையில் இவர் பணிபுரியும் அடையாள அட்டையைப் பறித்துக் கொண்டும் மற்றும் 2 பேர் தோள் பட்டையில் சரமாரியாக தாக்கினார்கள். வலி தாங்க முடியாமல் கத்தியபோது, சக பத்திரிகையாளர்கள் வெளியே வந்து பார்த்தவுடன் தாக்குதலை நிறுத்திக் கொண்டார்கள்.

இது சம்பந்தமாக அன்று இரவே தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜே.பி.ஆர். மற்றும் சக நிர்வாகிகளுக்கும் தெரியப்படுத்தி மறுநாள் (14.2.2011) அன்று காலை சுமார் 100க்கும் மேற்பட்ட நிருபர்கள் ஈஷா மையம் ஜக்கி மீது புகார் கொடுத்தனர்.

புகாரைப் பெற்றுக் கொண்ட கோவை மாநகர காவல்துறை ஆணையர் சைலேந்திரபாபு சம்பந்தப்பட்டவர்கள் மீது விசாரணை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். இதன் அடிப்படையில் அருகிலுள்ள பந்தைய சாலை பி4 காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாருக்கு காவல்நிலைய ஆய்வாளர் நகல் பிரதியை வழங்கினார். நகலின் பதிவு எண்.433/1808. இது இன்று வரை கிணற்றில் போட்ட கல்லுபோல் நன்றாக உறங்கிக் கொண்டிருக்கிறது.

அதேபோல 2006 ஆம் ஆண்டு கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் இவர் மீது புகார் கொடுத்தும், நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டும் வழக்கின் முடிவு வெத்துவேட்டாகி இவரின் மனைவி, மகளையும் இழந்தது தான் மிச்சம். இதுபோல பல மாவட்டங்களிலிருந்த 18 வயதிற்குட்பட்ட பெண்கள் இவரால் யோகாசனம் என்கிற மூளைச் சலவை செய்து தன்வசப்படுத்திக் கொண்டார் என்றும் குற்றச்சாட்டு உள்ளது.

இப்படிப்பட்ட சந்தேகத்திற்குரிய மதவாதியான ஜக்கி வாசுதேவ் தன்னுடைய குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கம் அளிப்பாரா அல்லது அமைதி காத்து குற்றவாளி என ஒத்துக் கொள்வாரா?


"எந்த ஒரு அரசு வளாகத்திலும் மத பிரச்சாரம் செய்யக் கூடாது" என்று அரசு ஆணை உள்ள நிலையில் குற்ற பின்னணி உள்ள மதவாதியை ஈசா யோகா என்கிற பெயரில் மதப் பிரச்சாரம் செய்ய அனுமதியளித்த அரசு கலைக் கல்லூரி முதல்வராவது இது குறித்து விளக்கம் அளிப்பாரா? - என்று துண்டறிக்கையில் அச்சிடப்பட்டிருந்தது.

கழகத் தோழர்கள் ஈஷா மதப் பிரச்சாரம் நடந்த கல்லூரி வாயிலேயே இந்தத் துண்டறிக்கையை வழங்கியது, பெரும் பரபரப்பை உருவாக்கியது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 13th October 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | அக். 20, 2011 | புரட்சி 10 | முழக்கம் 40 | விலை: ரூ.2.50

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கம்

# பெரியார் முன் வைத்த திராவிட அரசியல் என்ன?

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இவ்வாரம் வெளிவந்துள்ள ‘ஆனந்த விகடன்’ இதழுக்கு (அக்.19) அளித்துள்ள பேட்டி இது. பேட்டி எடுத்தவர் ரீ. சிவக்குமார்.*

இனவெறி... சாதிவெறி இரண்டுக்கும் எதிரான போராட்டங்களின் குறியீட்டுப் பெயர்தான் கொளத்தூர் மணி. உள்ளூர்ச் சேரிகளில் தீண்டாமை திணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட தமிழர்களுக்கும் ஈழத்து முள்வேலிகளில் அடைக்கப்பட்ட தமிழர்களுக்கும் சற்றும் சமரசம் இன்றிக் குரல் கொடுப்பவர். மூன்று தமிழர்களின் உயிர் காக்க மரண தண்டனை எதிர்ப்புப் பிரச்சாரப் பயணத்தில் இருந்தவரைச் சந்தித்தேன்.

*நீங்கள் பெரியார் கொள்கைகள்பால் எப்படி ஈர்க்கப்பட்டீர்கள்?*

கொளத்தூர் நிர்மலா உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டு இருந்த போது, புலவர் வ. வேணுகோபால் என்ற தமிழ் ஆசிரியர்தான் எனக்கு முதன்முதலில் பகுத்தறிவுச் சிந்தனைகளை அறிமுகப்படுத்தினார். வகுப்பறையில் புராணக் கதைகள் குறித்து அவ்வப்போது விமர்சனங்களை முன் வைப்பார். ‘புராணம் என்றால் பழமை, நவீனம் என்றால் புதுமை. புராணக் கதை என்றால் பழைய பொய்’ என்று சொன்ன அவர், ‘விடுதலையில் தீபாவளி பற்றி ஒரு கதை வந்திருக்கிறது. படியுங்கள்’ என்றார். அப்போதுதான் முதன்முதலாக விடுதலை இதழைப் படித்தேன். கொஞ்சம் கொஞ்சமாகப் பெரியாரின் கருத்துகள் என்னை ஈர்த்தன.1962; இல் அப்போதைய மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்துப் பேசுவதற்காக பெரியார் எங்கள் ஊருக்கு வந்தார். அப்போது பெரியாரின் பேச்சை முழுமையாக உள்வாங்கிக் கொண்டேன் என்று சொல்ல முடியாது. 1971 இல் கொளத்தூரில் பெரியாரை வைத்து பொதுக் கூட்டம் நடத்தியதில் இருந்து என் இயக்க செயல்பாடுகள் தொடங்கின.

*ஒரு பெரியாரிஸ்ட் என்ற முறையில் இன்றைய சூழலில் பெரியாரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை, விட்டுவிட வேண்டியவை என்று எவற்றைக் கருதுகிறீர்கள்?*

சாதி ஒழிப்பும் பெண் விடுதலையும்தான் பெரியார் கொள்கைகளின் அடித்தளம். அவரது கடவுள் மறுப்பும் தனித் தமிழ்நாடு கோரிக்கையும் கூட, சாதி ஒழிப்புக் கொள்கையின் நீட்சிதான். நான் மட்டும் அல்ல, இந்த மானிட சமுதாயமே பெரியாரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியது சுயமரியாதையையும் சமத்துவத்தையும்தான். பெரியாரிடம் இருந்துவிட்டுவிட வேண்டியது என்று எதுவும் இல்லை ஆனால், பெரியார் இறந்து 38 ஆண்டுகள் ஆகிவிட்டன. சுற்றுச் சூழல் பாதுகாப்பு, அணு உலை எதிர்ப்பு போன்ற விடயங்கள் பெரியார் காலத்தில் இல்லை. இப்போது அதை எல்லாம் சேர்த்துப் பேச வேண்டும். மேலும், உலகின் தலைசிறந்த பெண் விடுதலைக் கருத்துகளைச் சொன்னவர் பெரியார். இப்போது பெண் விடுதலை என்பதைத் தாண்டி திருநங்கைகளின் உரிமை பற்றிப் பேசப்படுகிறது. அதேபோல், ஒரு காலத்தில் ‘எதை முதன்மைப்படுத்துவது சாதியையா-வர்க்கத்தையா?’ என்கிற கருத்துப் போராட்டம் பெரியார் இயக்கத்துக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே இருந்து வந்தது. ஆனால், சில பத்தாண்டுகளாக கம்யூனிஸ்ட்டுகள் இந்துத்துவ எதிர்ப்பை முன் வைக்கிறார்கள்; தீண்டாமைப் பிரச்னைகளைக் கையில் எடுத்துப் போராடுகிறார்கள். இது பெரியாரியலுக்குக் கிடைத்த வெற்றி. ஆனால், கம்யூனிஸ்ட்டுகள் எப்படி சாதிப் பிரச்சினைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறினார்களோ, அதேபோல பெரியாருக்குப் பின் பெரியார் இயக்கங்கள் பொதுவுடைமையை அழுத்தமாகப் பேசவில்லை. இன்றைய உலகமயமாக்கச் சூழலில் ‘பார்ப்பன - இந்திய தேசிய பன்னாட்டு கூட்டுக் கொள்ளை எதிர்ப்பு’ என்ற முழக்கத்தை நாங்கள் முன்வைக்கிறோம்.

*‘திராவிட அரசியல்தான் இன்றைய பல வீழ்ச்சிகளுக்குக் காரணம். திராவிடம் என்பதே மாயை’ என்று தொடர்ச்சியாக தமிழ் தேசியவாதிகள் பேசி வருகிறார்களே... இன்னும் திராவிட அடையாளத்தைச் சுமக்கத்தான் வேண்டுமா?*

போதிய புரிதல் இல்லாதவர்கள்தான் அப்படிப் பேசி வருகிறார்கள். மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு, பெரியார் சாகும் வரை ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று தனித்தமிழ்நாடு கோரிக்கையைத் தான் முன்வைத்தாரே தவிர, மலையாளிகள்,தெலுங்கர்கள், கன்னடர்களைச் சேர்த்து திராவிட நாடு விடுதலையை முன்வைக்கவில்லை. திராவிடம் என்பது ஏதோ நிலப் பரப்புக்கான அடையாளம் இல்லை. அது இந்துத்துவ எதிர்ப்பின் குறியீட்டுச் சொல். நாங்களும் தனித் தமிழ்நாடு கேட்கிறோம். தமிழ் தேசியவாதிகளும் தனித் தமிழ்நாடு கேட்கிறார்கள். ஆனால், அவர்கள் வெறுமனே மண்ணுக்கான விடுதலையை முன் வைக்கிறார்கள். நாங்கள் மக்களுக்கான விடுதலையை முன் வைக்கிறோம். ‘திராவிடர்’ என்ற சொல், பார்ப்பனர் அல்லாத மக்கள் என்ற பொருளில் தான் பெரியாரால் பயன்படுத்தப்பட்டது. திராவிட அரசியல் கட்சிகளின் மீது உள்ள வெறுப்பால் பலர் ‘திராவிடம் என்பதே மாயை’ என்று பேசி வருகிறார்கள். உண்மையில் திராவிட அரசியல் கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. கூட தமிழர்களிடத்தில் தான் அரசியல் செய்கின்றனவே தவிர, மலையாளிகள், தெலுங் கர்கள், கன்னடர்களிடத்தில் அல்ல. மேலும், சாதி ஒழிப்பு, தாழ்த்தப்பட்டோர் விடுதலை, பார்ப்பன எதிர்ப்பு, இந்துத்துவ எதிர்ப்பு, இந்திய தேசிய எதிர்ப்பு, பெண் விடுதலை... இவை எல்லாம் சேர்ந்ததுதான் பெரியார் முன் வைத்த திராவிட அரசியல். இன்றைய திராவிட அரசியல் கட்சிகள், இவை எதையும் முன் வைப்பது இல்லை. எனவே, திராவிட அரசியல் கட்சிகளை முன் வைத்து திராவிடம் என்கிற கருத் தாக்கத்தையே மறுப்பது அறியாமை.

*தொடர்ச்சியாக தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்கிறீர்கள். ஆனால், ‘பெரியார் கேரளாவில் நடத்திய வைக்கம் போராட்டம் தவிர, தமிழகத்தில் தீண்டாமைப் பிரச் சினைகளுக்கு எதிரான போராட் டங்களை முன்னெடுத்தது இல்லை’ என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகின்றதே?*

தீண்டாமை ஒழிய வேண்டும் என்றால், சாதி ஒழிய வேண்டும்; சாதி ஒழிய வேண்டும் என்றால், இந்து மதம் ஒழிய வேண்டும். இதுதான் பெரியாரின் அடிப்படைக் கொள்கை. இதற்காகத்தான் அவர் வாழ்நாள் முழுக்கப் பாடுபட்டார். சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக ஏராளமான ஆதி திராவிடர் சுய மரியாதை மாநாடுகளையும் ஆதி திராவிடர் கிறிஸ்தவர் சுயமரியாதை மாநாடுகளையும் நடத்தினார். முதுகுளத்தூர் கலவரத்தின்போது, தாழ்த்தப்பட்ட மக்களின் பக்கம் நின்று, ‘கலவரத்துக்குக் காரணமான பசும்பொன் முத்துராமலிங்கரைக் கைது செய்ய வேண்டும்’ என்று உறுதியாக வலியுறுத்தியதும் பெரியார் தான்.

மயிலாடுதுறை அருகே உள்ள காளி மற்றும் மாதிரி மங்கலம் ஆகிய ஊர்களில் ‘சாதித் தொழிலைச் செய்ய மாட்டோம்’ என்று தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்திய பறை தப்பட்டையை எரிக்கும் போராட்டம், காங்கிரஸ் மாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டம் என்று ஏராளமான போராட்டங்களைப் பெரியார் இயக்கம் நடத்தி உள்ளது. ஆனால், அவை எல்லாம் பெரிதாக ஆவணப் படுத்தப்படாததுதான் வரலாற்றுத் துயரம். 1926 இல் சிராவயல் என்ற ஊரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனிக் கிணறு அமைக்கப்பட்டு, அதைத் திறப்பதற்காகப் பெரியார் அழைக்கப்பட்டார். ஆனால், ‘பொதுக் கிணறுக்காகப் போராடுங்கள். தாகத்தால் செத்துப் போகலாமே தவிர, தனிக் கிணறு அமைப்பது தீர்வு அல்ல’ என்று பெரியார் மறுத்து

4 ஆம் பக்கம்

## ‘நரகாசுரனுக்கு’ வாழ்த்துக் கூறுவோம்!

இன்று நாம் (திராவிடர்கள்) இரண்யனையும், இராவணனையும் எப்படிப் போற்றிப் புகழ்ந்து மரியாதை செய்கிறோமோ அது போலவே நரகாசுரனும் நம் மரியாதைக்கு உரியவனாவான். ஆதலால் அப்படிப்பட்ட அவனை தேவர் கூட்டம் கொன்றதற்காக நாம் துக்கப்பட வேண்டுமேயொழிய, மகிழ்ச்சி அடைவது மடமையும், இழிவும், ஈனமுமாகும். ஆதலால் திராவிட மக்கள் எவரும் தீபாவளி பண்டிகைக் கொண்டாடக் கூடாது என்று வேண்டிக் கொண்டதோடு, திராவிடர் கழகத்தவர்கள் கண்டிப்பாகக் கொண்டாடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

தீபாவளியன்று கருப்புச் சட்டையுடன் நரகாசுரனுக்கு வாழ்த்துக் கூறிக் கொண்டு ஊர்வலம் வந்து அவனது கொலைக்காகத் துக்கப்படும் துக்க நாளாகக் கொள்ள வேண்டும்.

**பெரியார் – 12.10.49 ‘விடுதலை’ தலையங்கம்**

## கழகத்துக்கு புதிய தலைமையகம்

*பெரியார் திராவிடர் கழகத்தின் புதிய தலைமையகம் சென்னையில் செயல்படத் தொடங்கியிருப்பதை தோழர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*தலைமைக் கழக முகவரி:*
*95, நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம்,*
*மைலாப்பூர், சென்னை – 600 004.*
*(தொலைபேசிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது)*

தலையங்கம்

# கழகத்தின் வெற்றி!

மதச்சார்பற்ற நாட்டில் அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்கள் இந்து மதத்தின் நிறுவனங்கள் போல் செயல்பட்டு வருகின்றன. இந்து கடவுள் படங்கள் மாட்டப்பட்டு வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் பூசைகள் போடப்படுகின்றன. அரசு வளாகங்களுக்குள்ளேயே கோயில்கள் கட்டப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 'ஆயுத பூசை' மதப் பண்டிகை நாளில் 'தடபுடலாக' பூசைகள் போடுவது வழக்கமாக நடந்து வருகிறது. இந்த நடவடிக்கைகள் அனைத்துமே அரசு விதிகளுக்கு எதிரானவை என்றாலும், எவரும் தட்டிக் கேட்க முன் வராததால் முறைகேடுகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. பெரியார் திராவிடர் கழகம் கடந்த சில ஆண்டுகளாகவே அரசு அலுவலகங்களில் மதச் சடங்குகள் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இது தொடர்பாக தமிழக அரசும், மத்திய அரசும், ஏற்கனவே பல சுற்றறிக்கைகளை அனுப்பியும்கூட அரசு நிர்வாகமோ, காவல்துறையோ, அவைகளை அலட்சியப்படுத்தியே வந்தன.

1) அண்ணா - தமிழக முதல்வராக பதவிக்கு வந்தவுடன், அரசு அலுவலகங்களில் கடவுள்கள், சாமியார்கள், படங்களை மாட்டக் கூடாது என்றும், ஏற்கனவே மாட்டப்பட்டிருக்கு மானால் படிப்படியாக பிறர் கவனத்தை ஈர்க்காத வகையில் அகற்றிட வேண்டும் என்றும் தமிழக அரசு, தலைமைச்செயலாளர் ஒரு அரசாணையைப் பிறப்பித்தார். (29.4.1968, அரசாணைக் குறிப்பு எண்.7553/66-2)

2) அதேபோல், அரசு வளாகங்களில் மதம், வழிபாடு தொடர்பான புதிய கோயில்கள், வழிபாட்டுத் தளங்களைக் கட்டுவதும், ஏற்கனவே இருந்தால், அதைப் புதுப்பிப்பதும் கூடாது என்றும், அத்தகைய நிகழ்வுகள் ஏதும் நிகழாமல் உறுதி செய்வது துறைத் தலைவர்கள், தலைமை நிர்வாகிகள், மாவட்ட ஆட்சியர்களின் நடத்தை விதிகளுக்கு உட்பட்டதாகும் என்று வருவாய்த் துறை முதன்மை ஆணையர், வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் சார்பில், அனைத்துத் துறைகளுக்கும் அரசாணை அனுப்பப்பட்டது. (அரசாணை எண். 426, 13.12.1993)

3) அரசு அலுவலகக் கட்டிடங்களில் மதம் தொடர்பான முழக்கங்கள் எழுதுவதையோ, வளாகத்தில் வழிபாட்டுத் தளங்கள் அமைப்பதையோ அனுமதிக்கக் கூடாது என்று மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் அதற்கான ஆலோசனைக் குழுவின் கோரிக்கையை ஏற்று மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியது. அதனைத் தொடர்ந்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர் என். அரிபாஸ்கர், அய்.ஏ.எஸ்., அனைத்துத் துறைகளுக்கும் மத்திய அரசின் கடிதத்தை இணைத்து சுற்றறிக்கை ஒன்றை அனுப்பினார். (எண்.8472 சட்டம் மற்றும் ஒழுங்கு பி/94-1)

4) மதுரை உயர்நீதிமன்றமும், அரசு வளாகத்தில் வழிபாட்டுத் தளங்கள், மத நிகழ்வுகள் நடப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும், 1993 ஆம் ஆண்டின் அரசு ஆணையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்றும், 17.3.2010 இல் உத்தரவிட்டது. அந்த உத்தரவின் அறிவுறுத்தல், அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அரசு செயலாளர் வழியாக 22.4.2010 அன்று கடிதமாக (கடிதம் எண்.16844/ஏ/2010-1) அனைத்து அரசுத் துறைகளுக்கும் அனுப்பப்பட்டது.

5) காவல் நிலையங்களிலோ, காவலர் குடியிருப்பு வளாகத்திலோ, வழிபாட்டுத் தளங்களை அமைப்பது அரசியல் சட்டத்தின் அடிப்படை நோக்கத்துக்கு எதிரானது என்றும், நமது நாடு மதச்சார்பற்ற நாடு என்பதை நினைவில் கொண்டு சட்டத்தையும், சட்ட ஒழுங்கையும் காப்பாற்றும் கடமை ஆற்றக் கூடியவாறு காவல் துறையினர் செயல்பட வேண்டும் என்றும், சமூக நல்லிணக்கத்தோடு, பிற மதத்தினரையும் அரவணைத்துச் செல்வதில் முன் உதாரணமாக செயல்படவேண்டும் என்றும் உண்மையான பணி செய்யக் கூடிய அரசு அலுவலக வளாகமே வணங்கத்தக்கது என்பதால், தனியாக வழிபாடு தேவையற்றது என்றும், காவல்துறை தலைமை இயக்குனர் இலத்திகா சரண், ஒரு சுற்றறிக்கையை 28.5.2005 இல் (ஆர்.சி.எண். 96243/கட்டிடங்கள் 1(1)2005) அனுப்பினார்.

இவ்வளவு சுற்றறிக்கைகள், ஆணைகள், தீர்ப்புகள் இருந்த நிலையிலும் அவைகள் மீறப் பட்டே வந்தன. கண்காணிப்பு அமைப்புகளோ, தட்டிக் கேட்கும் இயக்கங்களோ இல்லை என்ற நிலையில் பெரியார் திராவிடர் கழகம், கடந்த சில ஆண்டுகளாகவே இந்த சுற்றறிக்கைகளை காவல் நிலையங்களுக்கும், அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பியதோடு, கடந்த ஆண்டு நேரிலும் கண்காணிக்கத் தொடங்கியது. அரசாணைகளுக்கு எதிராக செயல்பட்ட சென்னை, மேட்டூர் போன்ற ஊர்களில் கழகத் தோழர்கள் காவல் நிலையங்களில் நுழைந்து சட்ட விரோத செயல்களைத் தடுத்தனர். இதனால் சட்டத்தை நிலைநாட்ட முயன்ற கழகத்தினர் கைது செய்யப்பட்டனர். இவ்வாண்டும் கழக சார்பில் அரசாணைகள், அரசுத் துறைகள் மற்றும் காவல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டது. அதனால் ஆயுத பூசைகள் பெருமளவில் காவல் நிலையங்களில் நிறுத்தப் பட்டுள்ளன. சில காவல் நிலையங்களில் ரகசியமாக பூசைகள் போடப்பட்டதாகத் தெரிகிறது.

இப்போது தமிழக அரசின் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் சார்பில் அதன் துணைச் செயலாளர் கையெழுத்திட்டு, கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு பதில் கடிதம் ஒன்று அக்.11 ஆம் தேதி வந்துள்ளது. (கடித எண்.41000/ஏ1/2011-1 நாள். 11.10.2011) அதில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

"தங்களால் குறிப்பிடப்பட்டுள்ள அரசு கடிதத்தின் வாயிலாக, அனைத்து அரசு அலுவலகங் களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனை மீறி எந்த அரசு அலுவலகங்களில் மதவழிபாடு செய்கின்றனரோ, அந்த அலுவலகத்தின் உயர் அதிகாரிக்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு மனு செய்யலாம் என்பதனை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்" - என்று திட்டவட்டமாக, தெளிவாக கூறப்பட்டுள்ளது. இதன்படி, அரசு அலுவலகங்களிலோ, வளாகங்களிலோ, மத வழிபாடுகளை நடத்தும், காவல்துறையின ரானாலும், அதிகாரிகள் அலுவலரானாலும், நடவடிக்கைக்கு உள்ளாவார்கள் என்பதும், அவர்கள் மீது புகார் தெரிவித்து மனு தரலாம் என்றும், அரசு சார்பாகவே அறிவிக்கப்பட்டு விட்டது. இது பெரியார் திராவிடர் கழகம் மேற்கொண்ட இடைவிடாத முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றி என்றாலும், மதச் சார்பற்ற கொள்கையை நாட்டில் அமுல்படுத்த விரும்பும் எவரும், தங்கள் பகுதிகளில் அரசு அலுவலகங்கள், காவல்துறையைக் கண்காணித்து, உரிய நடவடிக்கை எடுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளதைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்துத்துவ சக்திகள் கேள்வி கேட்பாரின்றி எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் என்ற நிலைக்கு கடிவாளம் போடும், இத்தகைய முயற்சிகள் இன்று அவசியமாகிறது. மதவெறிக் கலவரமாக தமிழகம் மாறிவிடக் கூடாது என்ற கவலையுடன் மக்கள் மன்றத்திலும், நீதிமன்றத்திலும் பணியாற்ற வேண்டியது, மிக அவசியமாகிறது!

# அணுசக்தி ஆதரவாளர்களிடமிருந்து விடை கிடைக்காத கேள்விகள்

***அணுமின் சக்தி உற்பத்தியை ஆதரிப்போர் சில முக்கிய கேள்விகளுக்கு பதில் கூறுவது இல்லை.***

1. அணுமின் உலைகளில் பேரழிவை ஏற்படுத்தும் விபத்து ஏற்படுத்துவதற்கான சாத்தியமே இல்லை என்று ஒருவரும் உறுதியளிக்கத் தயாராக இல்லை.

2. இதுவரை இந்தியாவின் அணு உலைகளில் ஏற்பட்ட பல விபத்துகளை அணு உலையை ஆதரிப்போர் 'சாதாரண' நிகழ்வுகள் என்று கூறி மூடி மறைக்கின்றனர். எடுத்துக் காட்டாக, 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் தேதி, கர்நாடக மாநிலத்தில் உள்ள கைகா அணுமின் நிலையத்தில் பணியாற்றிய 90 ஊழியர்கள் கதிர்வீச்சால் தாக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதனை மூடி மறைக்க அணுசக்தித் துறை கடும் முயற்சி மேற்கொண்டது. ஆனால், அதையெல்லாம் மீறி 28 ஆம் தேதி செய்தி வெளியானது. அப்போது பதிலளித்த கைகா அணுசக்தி நிலையத்தின் இயக்குனர் ஏ.என். குப்தா, பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் அணுஉலைக்கு வெளியேதான் இருந்திருக் கின்றனர். அப்படி இருந்தும் அந்த அளவிற்கு கதிர்வீச்சு எப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை என்று கூறினார். இதற்காக அணுசக்தி ஆணையம் அவரைக் கண்டித்ததோடு, இப்படிப்பட்ட விவரங்களை ஊடகங்களோடு பகிர்ந்து கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டது. இதே போன்று, மராட்டிய மாநிலம் டிராம்பேயில் உள்ள பாபா அணுசக்தி மையத்திலும் கடந்த ஆண்டு ஒரு விபத்து ஏற்பட்டது. அதைப் பற்றிய விவரங்கள் முழுமையாக வெளியிடப்படவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

3. புகுஷிமாவில் ஏற்பட்டதே மிக மோசமான விபத்து என்றும், அதைவிட பெரிதான விபத்து ஏற்படும் என்று கூறுவதற்கில்லை என்றும் அணுஉலை ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். அதனால்தான் புகுஷிமா விபத்தில் 'கற்ற பாடங்களின் அடிப்படையில்' பல மேம்பாடுகளை கூடங்குளம் அணுமின் நிலையத்தில் செய்துள்ளதாகக் கூறுகின்றனர்.

4. அணு உலைகளில் பயன்படுத்தப்படும் யுரேனியம் எரி பொருளில் 5 விழுக்காடு மட்டுமே செறிவூட்டப்பட்டு பயன்படுத்தப்படுகிறது என்கிறது உலக அணுசக்தி சங்கம். ஆனால் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் எவ்வாறு கையாளப் படுகிறது என்ற எந்த விவரத்தையும் கூற மறுக்கிறார்கள். இதுவரை மறுசுழற்சி தொழில் நுட்பம் இந்தியாவிடம் உள்ளது என்றுதான் கூறுகிறார்களே தவிர, அது எங்கு எப்படி பயன்படுத்தப்படுகிறது என்ற விவரமும் தெரிவிக்கப்பட வில்லை.

5. இந்தியாவில் பல பத்தாண்டுகளாக 20 அணு உலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் பயன்படுத்தப்பட்ட யுரேனியம் எரிபொருளில் இருந்து கிடைக்கும் துணைப் பொருளான புளூட்டோனியம் எனும் அணுப் பொருள்தான் அணுகுண்டு தயாரிக்கத் தேவையான வெடி பொருளாகும். புளூட் டோனியத்தை எரி பொருளாக பயன்படுத்தி, அணு மின் சக்தி தயாரிக்கும் வேக அணு உலை ஒன்று இப்போது தான் கல்பாக்கத்தில் கட்டப்பட்டு வருகிறது.

6. அணுஉலைகள் அமைத்து அதிலிருந்து மின் சக்தி தயாரிக்க ஆகும் செலவு ஒரு கிலோ வாட்டிற்கு ரூ.3 மட்டுமே என்கிறார் எம்.ஆர். சீனிவாசன் (சூரிய சக்தி தயாரிப்புக்கு ரூ.30 ஆகும் என்கிறார்) ஆனால், இது எந்தக் கணக்கின் அடிப்படையில் என் பதை விளக்கவில்லை. இவர்கள் அயல்நாடுகளில் இருந்து வாங்கி நிறுவும் அணு உலைகள் மிக அதிக விலையானவை. அப்படியிருக்கும் போது, மிகக் குறைந்த தயாரிப்புத் திறன் கொண்ட இந்திய அணு உலைகளில் இருந்து பெறப்படும் உற்பத்தி - விலை கணக்கை அயல்நாட்டு அணு உலைகளுக்கும் பொருத்தி கணக்கு சொல்வது எப்படி சரியாகும்?

7. ஒரு அணு உலையின் ஆயுள் 30 ஆண்டுகள் மட்டுமே. இவர்கள் 'நன்றாக பராமரித்து' 60 ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம் என்று கூறுகின்றனர். அப்படியே வைத்துக் கொண்டாலும், 60 ஆண்டுகளுக்குப் பிறகு அதனை மூடுவதற்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதை இதுவரை சொல்லவில்லை.

## கழகத் தலைமையகத்தில் நடந்த முதல் சிந்தனை வட்டம்

கழகத்தின் புதிய தலைமையகத்தில் 'மணல்மேடு வெள்ளைச்சாமி-பட்டுக்கோட்டை இராமசாமி சிந்தனை வட்டத்தின்' சார்பில் சிந்தனை அரங்கம் 13.10.2011 அன்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. "கூடங்குளம் அணுமின் நிலையம் அவசியமா?" என்ற தலைப்பில் ஆண்டன் கோமஸ் (கூடங்குளம் அணுஉலை எதிர்ப்புக் கூட்டமைப்புத் தலைவர்), ஊடகவியலாளர் டிஎ.ஸ்.எஸ். மணி, பொறியாளர் பொன். ஏழுமலை ஆகியோர் உரையாற்றினர். 70 தோழர்கள் பங்கேற்றனர். சிந்தனை மய்யத்தின் ஒருங்கிணைப்பாளர் சுகுமார் வரவேற்புரையாற்ற, கழகப் பொறுப்பாளர் ச. குமரன் நன்றி கூறினார். இது, கழகத்தின் புதிய தலைமையகத்தில் நடந்த முதல் கூட்டம். அனைவருக்கும் இனிப்பு, தேனீர் வழங்கப்பட்டது.

# ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (3)

*ராஜீவ் காந்தி ஈழத்துக்கு அனுப்பி வைத்த இந்திய ராணுவம் 1987 ஆம் ஆண்டில் நிகழ்த்திய போர்க் குற்றங்கள், இனப் படுகொலைகள் பற்றிய ஒரு தொகுப்பு:*

**18.10.87**

இன்று நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த அலன்,ஜனா, விஜி ஆகியோர் வீர மரணமடைந்தனர். மானிப்பாய், ஆனைக் கோட்டைப் பகுதிகளில் 3 மணி நேரத்துக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட 125 எம்.எம்.ஆட்லரி செல்கள் இந்திய படையினரால் ஏவப்பட்டன. இதில் 9 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் நூறு பேர் வரையில் படுகாயமடைந்தனர்.

பலரின் வீடுகளும், உடைமைகளும் கடும் சேதத்துக்குள்ளாயின. மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலடியில் இந்தியப் படையினரால் ஏவப்பட்ட செல்கள் விழுந்து வெடித்ததில் கோயிலில் தஞ்சம் புகுந்திருந்த பல பொது மக்கள் காயமடைந்ததுடன், கோயிலும் பலத்த சேதத்துக்குள்ளானது.

18 ஆம் தேதி மாலை 3 மணியளவில் கோப்பாயில் மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட இந்தியப் படையினரின் செயின் வாகனத்தின் மீது விடுதலைப் புலிகள் ஆர்.பி.ஜீ. மற்றும் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு செயின் கவச வண்டி முற்றாகச் சேதமுற்றது. சண்டிலிப்பாய் என்ற இடத்தில் இந்தியப் படையினரின் ஒரு செயின் வாகனம் விடுதலைப் புலிகளால் தாக்கித் தகர்க்கப்பட்டது.

தாக்குதலுக்கு எதிர் நிற்க முடியாத இந்தியப் படையினர் பின் வாங்கினர். விடுதலைப் புலிகள் இந்தியப் படையினரிடமிருந்து ஒரு ஜீ.பி.எம்.ஜி. மற்றும் ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

கோப்பாயில் நடந்த கடும் சமரில் இந்தியப் படையினரின் 5 ஏ.பி.சி. கவச வண்டிகளை விடுதலைப் புலிகள் ராக்கட் லோஞ்சர் கொண்டு தாக்கி அழித்தனர். நாவாந்துறையில் இருந்து யாழ் கோட்டையை நோக்கி முன்னேற முயன்ற இந்தியப் படையினரின் முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். யாழ் கோட்டையிலிருந்து வெளியே வர முயன்ற இந்தியப் படையினரின் முயற்சியையும் விடுதலைப் புலிகள் முறியடித்தனர்.

**20.10.87**

இன்று கோண்டாவில் வைத்து இந்தியப் படையினரின் 3 ஏ.பி.சி. டாங்குகளை பசுக்கா (ராக்கட்) தாக்குதல் மூலம் அழித்தனர்.

அராலியில் நடந்த சண்டையில் இந்திய அமைதிப் படையில் ஒரு ஏ.பி.சி. கவச வண்டி ஒரு ஜீப் வண்டி, ஒரு கனன் ஆட்லரி உட்பட சகல ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியதுடன் இரண்டு இந்தியப் படையினரையும் விடுதலைப் புலிகள் கைது செய்தனர். கோப்பாயில் விடுதலைப் புலிகளின் 'பசூக்கா' ராக்கட் லோஞ்சர் தாக்குதலின்போது இந்திய அமைதிப் படையின் இரண்டு டாங்குகள் முற்றாக சேதமுற்றுள்ளன. அவர்களிடம் இருந்து இந்தியத் தயாரிப்புகளான இரண்டு 50 காலிபர் துப்பாக்கிகளையும் 3000 காலிபர் ரவைகளையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

பலாலியில் இருந்து உரும்பிராய்க்குச் சென்ற இந்தியப் படையினர் செல்லும் வழியில் 10 அப்பாவித் தமிழ் மக்களைச் சுட்டுக் கொன்றனர். ஆனைக்கோட்டையில் இருந்து கல்லுண்டாய் வெளிக்குச் சென்று இந்திய ராணுவத்தினர் 20-க்கும் மேற்பட்ட பொது மக்களைச் சுட்டுக் கொன்றனர்.

மாலை 3 மணியளவில் கோட்டை முகாமுக்கு அடுத்துள்ள பண்ணைப் பகுதியில் சிறீலங்காவின் 3 பொம்பர் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் மேற்கொண்டன. இதில் பல பொது மக்கள் இறந்ததுடன் மேலும் ஏராளமான மக்கள் காயமடைந்துள்ளனர்.

சிங்கள ராணுவத்தினர் நடத்தியதைவிட இந்திய அமைதிப் படையினர் நடத்திவரும் கொடூரமான செல் தாக்குதல்களினால் யாழ்நகரில் நிலைமை மிகவும் மோசமடைந்து வருகிறது. மக்கள் பெரிதும் துன்பம் அடைகின்றனர். நல்லூர் கந்தசாமி கோயிலில் அடைக்கலம் புகுந்திருந்த அகதிகள்கூட பீதியினால் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே இடம் பெயரத் தொடங்கியுள்ளனர். இந்தியப் படையினரால் தினசரி 500 செல்களுக்கு மேல் ஏவப்படுகின்றன. (சிங்கள இராணுவம் தாக்கிய காலத்தில் ஆகக் கூடியது 40-50 செல்கள் வரை தான் தினசரி பயன்படுத்தின) இதனால் மக்கள் பெரும் அளவில் காயமடைகின்றனர். ஏராளமான மக்கள் உணவு உறைவிடமின்றித் தவிக்கின்றனர்.

கேரத்தீவில் ஹெலிகாப்டர் சுட்டதில் 2 பொது மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் 2 பேர் படுகாயமுற்றனர்.

**21.10.87**

இன்று காலை யாழ்கோட்டையில் இருந்து வெளியே வர முயன்ற இந்திய அமைதி காக்கும் படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 10க்கும் மேற்பட்ட இந்திய அமைதிப் படையினர் கொல்லப்பட்டனர்; அவர்களிடமிருந்து எல்.எம்.ஜி., எஸ்.எம்.ஜி. போன்ற ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

யாழ் கோட்டை ராணுவ முகாமிலிருந்து இந்தியப் படையினர் நடத்திய செல் தாக்குதலில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியினுள் செல் விழுந்து வெடித்ததில் அங்கு அகதிகளாக இருந்த 7 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமுற்றனர். கல்லூரிக்கு அருகில் இருந்த வீடுகளில் இருந்த 5 பொது மக்களும் இந்தச் செல் தாக்குதலில் பலியாகினர்.

இந்திய அமைதி காக்கும் படையினரின் செல் தாக்குதலில் இனுவில் அம்மன் கோவிலில் தஞ்சம் அடைந்திருந்த 10 பேர் கொல்லப்பட்டனர். 28 பேர் காயமடைந்தனர்.

நகரின் 3 குண்டு வீச்சு விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதில் 100 க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

(தொடரும்)

# "சூத்திர" இழிவை நிலைநிறுத்தும் சட்டப் பிரிவுகள்

***இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள 'பழக்க வழக்கங்கள்' காப்பாற்றப்பட வேண்டும் என்ற பிரிவு வழியாகவே நான்கு வர்ண தர்மம் காப் பாற்றப்பட்டு 'சூத்திரர்' இழிவு நிலை நிறுத்தப்படுகிறது என்பதை விளக்கி மா.பெ.பொ.க. அமைப்பாளர் வே. ஆனைமுத்து எழுதிய தலையங்கத்திலிருந்து ஒரு பகுதி:***

"பெரியார் அவர்கள் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக வேண்டும் என்ற போராட்டத்தை 1969 இல் அறிவித்த உடனேயே, அன்றைய தி.மு.க. அரசு முன்வந்து உரிய சட்டத்தை இயற்றியது. பார்ப்பனர்கள் அதை எதிர்த்து வழக்குத் தொடுத்தனர். அதனால் ஏற்பட்ட தடையை நீக்குத் தன்மையில் மீண்டும் ஒரு சட்டத்தை தி.மு.க. அரசு 2006 இல் நிறைவேற்றியது. அப்படி நிறைவேற்றியபோது வழக்கச் சட்டம், பழக்கச் சட்டம் இவையெல்லாம் இருந்தாலும் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று குறிப்பிட்டு ஆணை பிறப்பிக்கப் பட்டது. (In a radical move, the then DMK Government issued a government order in May 2006 declaring, that suitably trained and qualified Hindus, without 'discrimination of caste, creed custom or usage' were to be appointed as archakas (priests) to any of the 36000 temples administer by the HRCE department in the state.) பழக்கச் சட்டம், வழக்கச் சட்டம் இவற்றை மாற்றுவதற்கான அதிகாரம் இந்திய நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உண்டு. அதை உள்வாங்கிக் கொள்ளாமல் தமிழ்நாடு அரசாங்கம் சட்டம் செய்தது. அதன்படி 300 பேர்களுக்கு - பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மேல்சாதியினர் ஆகியோருக்கு அர்ச்சகர் பயிற்சிக் கொடுத்தது. ஆனாலும் இந்துக் கோயில்களுக்கு அர்ச்சகர் வேலைக்கு விண்ணப் பிக்கலாம் என்று தமிழ்நாடு இந்து அறநிலையத் துறை விளம்பரப்படுத்தும்போது, "பார்ப்பனர் மட்டுமே விண்ணப்பிக்கலாம்" என விளம்பரப் படுத்தியது. ஏன் எனில் ஏற்கனவே இதுபற்றி நீதிபதி மகாராஜன் குழு அளித்த அறிக்கையில் பார்ப்பனர் மட்டுமே அர்ச்சகர் ஆக முடியும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அத்துடன் அரசியல் சட்ட விதி 25, 26 இல் உள்ளபடி வழக்கச் சட்டம், பழக்கச் சட்டம் இவற்றை மாநில அரசு மாற்ற இயலாது என்பதே உண்மையாகும். இதை நாம் எப்படி அறிகிறோம்? இது பற்றி நாம் கவலைப்பட்டோமா?

இதைச் சரியாகப் புரிந்து 1948 லேயே கவலைப் பட்டவர் சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களே ஆவார். அவர் அரசமைப்புச் சட்டக் குழுவின் தலைவராக 1947 இல் பொறுப்பேற்றார். அப்போதே, ஏற்கெனவே எழுதி வைக்கப்பட்டிருந்த அரசமைப்புச் சட்டத்தின் முதலாவது வரைவு என்கிற பி.என்.ராவ் எழுதிய அரசியல் சட்ட வரைவு 17.10.1947 இல் அம்பேத்கரிடம் ஒப்படைக்கப் பட்டது.

அதில் வேலையில் இடஒதுக்கீடு பற்றிய விதியில் "to any class of citizens" என்றே பி.என்.ராவ் எழுதியிருந்தார். அவருடைய தீய உள்நோக்கத்தை உடனே உணர்ந்த மேதை அம்பேத்கர், "to any backward class of citizens" என்பதைச் சேர்த்தார்.

அதேபோல் அந்த வரைவு பழக்கச் சட்டம், வழக்கச் சட்டத்தைப் பாதுகாக்கிறது என்பதை அறிந்த அம்பேத்கர், இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கென்று 1948 இல் அவர் முன்மொழிந்த இந்துச் சட்டத்திருத்த மசோதாவில், மிகத் தெளிவாக ஒரு திருத்தத்தை முன்மொழிந்தார். அது பின் வருமாறு அமைந்திருந்தது:

"Overriding effect of code - Save as otherwise expressly provided in this Code, any text, rule or interpretation of Hindu Law, or any custom of usage or any other law in force immediately prior to the commencement of this code shall cease to have effect in respect of any of the matters dealt within this code."

இதன் பொருள் என்ன?

"இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட எதுவும் இந்தச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால் இந்துச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற எந்தச் சட்ட வாசகமும், விதியும் அல்லது சட்ட விளக்கமும் அல்லது எந்தப் பழக்கமும் எந்த வழக்கமும் அல்லது இந்தச் சட்டத்துக்கு முன்னால் இருந்த எச்சட்டமும் இந்த இந்துச் சட்ட மசோதா நடப்புக்கு வந்த பின்னர் செல்லுபடியாகாது."

அம்பேத்கரின் இந்தத் திருத்தத்தை எதிர்த்தவர் பாபு இராசேந்திர பிரசாத் (குடியரசுத் தலைவர்). அடுத்ததாக அதை எதிர்த்தவர் மறைந்த காஞ்சி சந்திர சேகரேந்திர சரசுவதி ஆவார். அவரே வென்றார்.

அரசமைப்புச் சட்ட விதிகள் 13, 19, 25, 26, 372(1) இவற்றில் "பழக்கச் சட்டம்", "வழக்கச் சட்டம்" (Custom and Usage) என்பதற்குக் கெட்டியான பாதுகாப்பு இருக்கிறது. இது இந்துக்கள், பார்சி, பவுத்தர், சீக்கியர் ஆகியோரைக் கட்டுப்படுத்துகிறது. மேலே கண்ட ஐந்து விதிகளில் உள்ள இந்தப் பாதுகாப்பை டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்த சட்டத் திருத்தத்தைப் போன்ற ஒரு விதியை அரசமைப்புச் சட்டத்தில் சேர்ப்பதன் மூலமே - நால் வருணை வேறுபாட்டை ஒழிக்க முடியும். அதன்படி உரிமை மறுக்கப்பட்டோருக்கு அப்போதுதான் உரிமை வந்து சேர முடியும். பகுத்தறிவாளர் ஒவ்வொருவருக்கும இந்தப் புரிதல் வரவேண்டும் என விரும்புகிறோம்.

**'சிந்தனையாளன்', அக்.2011**

# ஜெயேந்திரனின் கொலை வழக்கில் புதிய திருப்பம்!

கொலைக் குற்ற வழக்கிலிருந்து விடுதலை பெறுவதற்கு பார்ப்பனர்கள் 'லோக குருவாக' சித்தரிக்கும் காஞ்சி ஜெயேந்திரன் நீதிபதிக்கு லஞ்சம் தர முயன்ற செய்தி ஏற்கனவே அம்பலமாகியுள்ளது. தனக்கு நெருக்கமான ஒரு பெண் வழியாக நீதிபதியிடம் ஜெயேந்திரன் நடத்திய அலைபேசி உரையாடல் அம்பலமாகி, உயர்நீதிமன்றத்திலும் சுந்தர் ராசன் என்ற வழக்கறிஞர் வழக்கு தொடர்ந்துள்ளார். உயர்நீதி மன்றம் மனுவை விசாரணைக்கு ஏற்று சங்கராச்சாரி வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது. சங்கராச்சாரியும், பார்ப்பன வட்டாரங்களும் அதிர்ச்சியடைந்து நிற்கின்றன. இந்த நிலையில் கொலையுண்ட சங்கர்ராமனின் மனைவி தந்துள்ள புகார் மற்றொரு திருப்பமாக இந்த வழக்கில் உருவாகியுள்ளது.

சங்கராச்சாரியை கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்து நடவடிக்கை எடுத்தது ஜெயலலிதா தலைமையில்தான் நடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில். 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் தேதி சங்கர்ராமன் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயி லுக்குள் கொலை செய்யப்பட்டார். சிறப்பு புலனாய்வுக் குழு தீவிர விசாரணைக்குப் பிறகு இந்தக் கொலை வழக்கில் ஜெயேந்திரனைக் குற்றவாளி என்று கண்டறிந்து 2005 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதி ஆந்திராவில் கைது செய்தது. மடத்தின் அடுத்த இளைய பார்ப்பன சங்கராச்சாரி விஜயேந்திர சரசுவதி மற்றும் 16 பேரையும் காவல் துறை கைது செய்தது. காஞ்சி மடத்துக்கு உரிய 183 வங்கிக் கணக்குகள் முடக்கி வைக்கப்பட்டன. ஜெயேந்திரன் தன் வழக்கின் மீது தமிழக நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்காது என்று கூறி, வேறு மாநிலத்துக்கு விசாரணையை மாற்றுமாறு உச்சநீதி மன்றத்தை அணுகினார். உச்சநீதி மன்றம் வழக்கு விசாரணையை புதுவைக்கு மாற்றி உத்தரவிட்டது. அரசு தரப்பு சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகி, சங்கராச்சாரியை தப்பிக்க வைக்க உதவினர். காவல்துறையின் 77 சாட்சிகள் 'பல்டி' அடித்து விட்டனர். தி.மு.க. ஆட்சியின் காவல்துறை சங்கராச்சாரியை காப்பாற்றவே முடிவு செய்து விட்டதோ என்ற சந்தேகம் எழுந்தது.

இந்த நிலையில் ஜெயேந்திரன் நீதிபதியுடன் பேரம் பேசிய 'அலை பேசி' உரையாடல் அம்பலமானது. அதனைத் தொடர்ந்து, கழகத்தின் மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி மற்றும் வழக்கறிஞர் வி.இளங்கோவன், சென்னை உயர்நீதிமன்றத்தின் கண்காணிப்புத் துறையிடம் இது குறித்து புகார் தந்தனர். வழக்கை விசாரிக்கும் நீதிபதி மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வழக்கை மீண்டும் மறு விசாரணை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர். தொடர்ந்து வழக்கறிஞர் பி.சுந்தர்ராசன் வழக்கு தொடர்ந்தார். இப்போது அடுத்த திருப்பமாக கொலை செய்யப்பட்ட சங்கர்ராமன் மனைவி, தனக்கும் தனது குடும்பத்துக்கும் கொலை மிரட்டல் வந்ததாக தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார். ஜெயேந்திரனுக்கு எதிராக தாம் சாட்சியளித்த நாளில், உணவு இடைவெளி நேரத்தில் ஜெயேந்திரனுக்கு எதிராக சாட்சி கூறினால், தமது பிள்ளைகளை அமிலத்தில் போட்டு எரித்து விடுவதாக மிரட்டி தன்னை சாட்சி யத்தை மாற்றிக் கூற வைத்து விட்டார்கள் என்றும், தனக்கும் தனது குடும்பத்துக்கும் பாதுகாப்பு தரப்பட வேண்டும் என்றும் அவர் மனுவில் கூறியுள்ளார்.

இதனால் தி.மு.க. ஆட்சியில் காவல்துறை ஆதரவில் தப்பித்துவிடலாம் என நகர்த்திய ஜெயேந்திரனும் பார்ப்பன வட்டாரங்களும் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

## சங்கராபுரத்தில் போர்க் குற்ற விளக்கப் பொதுக்கூட்டம்

இராசபக்சேவின் போர்க் குற்றங்களை ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை விளக்கிப் பொதுக் கூட்டம் 6.6.2011 திங்கள் மாலை 6 மணியளவில் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வெற்றிவேல் தலைமை தாங்கினார். கல்லை ஆசைத்தம்பி, விழுப்புரம் மா.கணேசன் திருமால் ஆகியோர் முன்னிலை வகிக்க செ. நாவாப்பிள்ளை வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் ப.கண்ணன், பொள்ளாச்சி கா.சு. நாகராஜன் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். செ. பிரபு, சி. சாமிதுரை, சா.க. இளையராசா, ச. பெரியார் வெங்கட், தஞ்சாவூர் ஆனந்த குமார், உதயகுமார், பதி, ஆறுமுகம், சேலம் கோகுல கண்ணன் உள்பட ஏராளமான தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சென்னை நாத்திகனின் பகுத்தறிவு பாடல்கள் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர் தினகரன் நன்றியுரையாற்றினார். ந. அய்யனார் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்தார்.

முதல் பக்கத் தொடர்ச்சி

விட்டார். 'பறையன் பட்டம் போகாமல் சூத்திரன் பட்டம் போகாது' என்று யார் தீண்டாமையை மேற் கொள்கிறார்களோ, அந்த பிற்படுத்தப்பட்டவர்களிடம் பெரியார் பேசினார். அதுதான் புரட்சி."

*பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும். ராஜபக்சேயைப் போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்று ஜெயலலிதா சட்டமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றிய பிறகு, ஈழ ஆதரவாளர்கள் சமச்சீர்க் கல்வி, பரமக்குடி துப்பாக்கிச் சூடு, நரேந்திர மோடி உண்ணாவிரதத்துக்கு ஆதரவு போன்ற விஷயங்களில் ஜெயலலிதாவைக் கடுமையாக விமர்சிப்பது இல்லையே?*

ஈழ ஆதரவாளர்களில் பலர் சாதி ஒழிப்பு, சிறுபான்மையினர் உரிமைகள், சுற்றுச் சூழல் பிரச்சினை, மனித உரிமைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தாத போக்கு இருக்கிறது. அதே நேரத்தில், காஷ்மீர், தண்டகாரண்யம், சல்வாஜுடும் பற்றிப் பேசும் பலர் ஈழப் பிரச்சினை பற்றிக் கவலைப்படுவது இல்லை. இரண்டு தரப்பிலும் போதாமைகள் இருக்கின்றன. இவை சரி செய்யப்பட வேண்டும்.

*பிரபாகரன் உயிரோடு இருக்கிறாரா? ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க என்ன மாதிரியான தீர்வுகளை முன் வைக்கிறீர்கள்?*

பிரபாகரன் உயிரோடு இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால், உயிரோடு இருக்கிறாரா என்பது தெரியாது. இன்றைய சூழலில், ராஜபக்சேயின் போர்க் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை வலுவாக முன் வைக்கப்படுகிறது. ஆனால், ராஜபக்சே மட்டுமே இனப் படுகொலையில் ஈடுபடவில்லை. எல்லா இலங்கை அதிபர்களுமே தமிழர்களுக்கு எதிராக இனப் படுகொலையில் ஈடுபட்டவர்கள்தான். உயிரோடு உள்ள எல்லா இலங்கை அதிபர்களுமே போர்க் குற்றங்களின் அடிப்படையில் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். ஈழப் பிரச்சினைக்கான தீர்வு தமிழீழம்தான் என்று கருதுகிறோம். அந்த மக்களின் விருப்பமும் அதுதான் என்று உறுதியாக நம்புகிறோம்!

## கழகப் பிரச்சாரக் கட்டமைப்பு நிதி வழங்கியோர்

| | |
|---|---|
| 15.9.2011 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் வந்த வரவு | ரூ.1, 98,000 |
| திருச்சி கே. சவுந்தர்ராசன் | ரூ. 10,000 |
| உடற்பயிற்சிக் கூடம் நடத்தும் உதயகுமார், மயிலாடுதுறை | ரூ. 5,000 |
| சபரி, தாராபுரம் | ரூ. 10,000 |
| அ. மகேந்திரன், பாலவாடி, கொளத்தூர். | ரூ. 10,000 |
| பரமேசுவரன், காவலாண்டியூர் | ரூ. 1,000 |
| டாக்டர் எஸ்.எஸ்.முத்து, திருவரங்கம் | ரூ. 5,000 |
| அருள், திலீபன் வாகன நிறுத்தகம், மேட்டூர் | ரூ. 1,000 |
| ஆக மொத்தம் | ரூ. 2,40,000 |

(தொடரும்)

## ஸ்காட்லாந்து தனி நாடாகும்?

பிரிட்டனிடம் இருந்து ஸ்காட்லாந்து பிரிந்து தனி நாடாவதற்கு ஆதரவு பெருகி வருவதாக சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகிய பகுதிகள் சேர்ந்ததே இன்றைய பிரிட்டன். இவற்றில், ஸ்காட்லாந்து தனி நாடாக வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக உள்ளது. கடந்த மே மாதம் ஸ்காட்லாந்தில் நடந்த தேர்தலில், ஸ்காட்டிஷ் தேசிய கட்சி வெற்றிப் பெற்றது. கட்சி சார்பில் முதல்வரான அலெக்ஸ் சல்மாண்டு, ஆட்சியின் இறுதியான ஐந்தாவது ஆண்டில், ஸ்காட்லாந்து விடுதலை குறித்த பொது ஓட்டெடுப்பு நடத்தப்படும் என உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில், ஸ்காட்லாந்து தவிர்த்த பிற பகுதிகளில், 'காம்ரெஸ்' என்ற நிறுவனம் சமீபத்தில் கருத்துக் கணிப்பு நடத்தியது. இதில் மொத்தம் 2004 இளைஞர்கள் பங்கேற்றனர். இவர்களில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியைச் சேர்ந்தோர் 39 சதவீதம் பேர், பிரதமர் டேவிட் கேமரூனின் கன்சர்வேடிவ் கட்சியினர் 37 சதவீதம் பேர், துணைப் பிரதமர் நிக் க்ளெக்கின் லிபரல் டெமாக்ரடிக் கட்சியினர் 10 சதவீதம் பேர், பிற கட்சியினர் 14 சதவீதம் பேர் ஸ்காட்லாந்து தனி நாடாவதை ஆதரித்துள்ளனர் என 'காம்ரெஸ்' குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கருத்துக் கணிப்பில், இங்கிலாந்து உள்ளிட்ட பிற பகுதிகளில் உள்ள இளைஞர்களில் 39 சதவீதம் பேர், ஸ்காட்லாந்து விடுதலைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். 38 சதவீதம் பேர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

## தோழர் மு.தங்கராசு – த. செல்வி இல்லத் திறப்பு விழா


14.9.2011 புதன் கிழமை காலை 11 மணிக்கு சேலம் ஜாகீர் அம்மாபாளையம் பாரதி நகரைச் சார்ந்த தோழர் மு.தங்கராசு - த. செல்வி ஆகியோரது மாரிமுத்தம்மாள் - அய்யனார் இல்லத் திறப்பு விழா பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி இல்லத்தைத் திறந்து வைத்தார். சிறப்பு அழைப்பாளர்களாக துணை மேயர் சி. பன்னீர்செல்வம், ம.தி.மு.க.- சீ.வெ. தாமரைக்கண்ணன், பா.ம.க. - கதிர் ராசரத்தினம், தி.மு.க. - எம். ஜெயவேல், அரங்க செல்லதுரை, சர்க்கரை மேஸ்திரி, ம.தி.மு.க. - ஆர். இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக டேவிட் நன்றியுரையாற்றினார்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 20th October 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | அக். 27, 2011 | புரட்சி 10 | முழக்கம் 41 | விலை: ரூ.2.50


## கூடங்குளம் அணுமின் திட்டம் ஆபத்தானது

# ரஷ்யாவின் ரகசிய அறிக்கை அம்பலமானது

*கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு மக்கள் எதிர்ப்பு தீவிரமாகி வரும் நிலையில் மன்மோகன் சிங் ஆட்சி, அத்திட்டத்தை நிறைவேற்றும் தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளது. மக்களுடைய போராட்டத்துக்கு 'மதச்சாயம்' பூசும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கிறிஸ்தவ தொண்டு நிறுவனங்கள் தூண்டிவிடுவதாக பிரச்சாரம் செய்யப்பட்டு 'இந்து' அடையாளத்தோடு, சில அமைப்புகள் அணுமின் திட்டத்துக்கு ஆதரவாக, களமிறக்கப்பட்டுள்ளன. அணுவின் ஆபத்து மதங்களைக் கடந்து அனைத்து மக்களுக்கும் எதிரானது என்பதே உண்மை.*

பார்ப்பனர்கள் இதில் அணு உலைத் திட்டங்களுக்கு ஆதரவாக களமிறக்கப்பட்டுள்ளனர். சென்னை மயிலாப்பூரில் பார்ப்பனர்கள் நடத்தும் பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் கூடங்குளம் திட்டத்துக்கு ஆதரவு திரட்டும் பரப்புரை இயக்கம் ஒன்று, கடந்த 23 ஆம் தேதி காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'இரசாயன தொழிற்சாலைகள் சங்கம்' என்ற அமைப்பின் பெயரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் கல்பாக்கம் அணுமின் நிலைய இயக்குனர் இராமமூர்த்தி, கூடங்குளம் அணுமின் நிலையத் தலைமைக் கட்டுமானப் பொறியாளர் பி.சி.பாடக் ஆகியோர் கூடங்குளம் அணுமின் நிலையத்தால் எந்த ஆபத்தும் வராது என்றும், உரிய பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் பேசினர். தொடர்ந்து கேள்வி நேரம் அறிவிக்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய பதில் இல்லாததால் கூச்சல் குழப்பம் நிலவியது. கூட்டத்துக்கு ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் கணிசமாக வந்திருந்தனர். கேள்விகளை கேட்க விடாது அவர்கள் தடுத்து கூச்சல் போட்டனர்.

கூடங்குளத்தில் கடந்த100 ஆண்டுகளில் பல முறை நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. அவை எல்லாமுமே 250 கிலோ மீட்டர் தூரத்துக்கு உள்ளாகவே நிகழ்ந்துள்ளது. ஆனால், கூடங்குளம் தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் 300 கிலோ மீட்டருக்கு அப்பால்தான் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தவறான தகவல் தரப்பட்டுள்ளது. இதை மேடையில் ஏறி ஒரு பார்வையாளர் கேட்டபோது, விஞ்ஞானிகளிடமிருந்து பதில் இல்லை. தொடர்ந்து கேள்விகள் கேட்பதை தடுத்ததால் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இந்தக் கூட்டத்தில் பார்வையாளர்களாக பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு செயலாளர் ஜி.இராமகிருட்டிணன், அக்கட்சி மாநிலங்களவை உறுப்பினர் டி.கே. ரங்கராசன், சட்டமன்ற உறுப்பினர் சவுந்தர்ராசன் ஆகியோரும் வந்திருந்தனர். எதிர்ப்பாளர்களை டி.கே.ரங்கராசன் சமாதானப் படுத்தினார். எழுத்தாளர் ஞாநி, வழக்கறிஞர் சுந்தர்ராஜன் உள்ளிட்ட தோழர்கள் கேள்விகளை எழுப்பினர். கேள்விகளுக்கு உரிய விளக்கம் தரப்படாததால் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

அக்.23 ஆம் தேதி மாலை கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு எதிராக சென்னையில் பனகல் மாளிகை அருகே தமிழக இளைஞர் எழுச்சி இயக்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். தமிழக மக்களுக்கு எதிராக மூன்று தமிழர்களை தூக்கிலிட முடிவு செய்த இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சி, ஒட்டு மொத்த தமிழர்களுக்கும் ஆபத்தை உருவாக்கக் கூடிய அணுமின் திட்டத்தை திணிக்கிறது. இரண்டு நடவடிக்கைகளுமே தமிழர்களின் இறையாண்மைக்கு எதிரான இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியின் கொடூர செயல்பாடுகளாகும் என்று குறிப்பிட்டார். இது தொடர்பாக அண்மையில் ஏடுகளில் வந்துள்ள சில செய்திகளை அவர் சுட்டிக் காட்டினார்.

1) கூடங்குளத்தில் நிறுவப்படவிருக்கும் ரஷ்யாவின் அணுஉலைகள் ஆபத்து இல்லாதவை என்றும், பாதுகாப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பில் கூறப்படுகிறது. அண்மையில் ரஷ்யாவின் அரசு அணு நிறுவனங்களிலே பணியாற்றும் அணு ஆராய்ச்சி விஞ்ஞானிகள் - ரஷ்ய பிரதமர் டிமிட்ரி மெட்வேதேவ் (Dimitry Medve dev) அவர்களிடம் ரஷ்யாவில் தயாரிக்கப்படும் அணு உலைகள் பற்றிய ஆய்வறிக்கையை கடந்த ஜூன் மாதம் வழங்கியுள்ளனர். இயற்கைப் பேரிடர்கள் நிகழும்போது அதை எதிர்கொள்ளும் ஆற்றல் இந்த அணுஉலைகளுக்கு இல்லை என்று அந்த அறிக்கையில் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். ரஷ்ய தயாரிப்பு அணு உலைகளில் இதுவரை வெளியில் தெரிவிக்கப்படாமல் ரகசியமாக பாதுகாக்கப்பட்டு வந்த பல குறைகளை இந்த அறிக்கை முதன் முறையாக வெளிச்சப்படுத்தியுள்ளது. இந்த அணுஉலையில் 31 கடுமையான குறைகளை ரஷ்ய விஞ்ஞானிகள் பட்டியலிட்டுள்ளனர். இயற்கைப் பேரிடர் பெரிய அளவில் நிகழும்போது அணுஉலையைக் கையாளுவோர் எதிர்கொள்ள வேண்டிய செயல்பாடுகள்; விபத்து நேரிட்டால் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற பல குறைபாடுகளை விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அணு உலை எந்திரங்களில் மின்சாரம் தொடர்பான பாதுகாப்புகள் மிக மோசமாக இருப்பதையும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் கடும் விபத்துக்குள்ளான செர்னோபில் அணுமின் நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட அணுஉலை வடிவமைப்பு முறை (RBMK) கூடங்குளத்தில் பயன்படுத்தவில்லை என்றாலும் (VVER) அணுஉலை 'ரியாக்டர்கள்' நீண்டகாலப் பயன்பாட்டிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதி செய்யப்படவில்லை. குளிரூட்டும் முறை பழுதடைந்தால், அதை சரி செய்து கொள்ளக் கூடிய பாதுகாப்புகள், முறையாக வடிவமைக்கப்படவில்லை. ஜப்பான் புக்குஷிமா அணுமின் நிலையத்தில் வெடிப்பு ஏற்பட்டதற்கு இந்தக் குறைபாடுதான் முக்கிய காரணம். குளிரூட்டும் சாதனங்களின் முக்கிய கருவிகள் மிகவும் பலவீனமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. பூமியதிர்வுகளால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமலே ரஷ்ய அணுஉலை வடிவமைக்கப்பட்டுள்ளது. பூமியதிர்ச்சி நேர்ந்தால், தானாகவே செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ளும் வசதிகள் செய்யப்படவில்லை, ஜப்பான் நாட்டின் 'புக்குஷிமா' விபத்துக்குப் பிறகு உள்ள நிலைகளைக் கருத்தில் கொண்டு ரஷ்ய அணுஉலை எந்திரங்கள் வடிவமைக்கப்படவில்லை என்று ரஷ்ய விஞ்ஞானிகளே பட்டியலிட்டு குறை கூறியிருக்கிறார்கள். ரஷ்ய அரசு ரகசியமாகப் பாதுகாத்து வைத்திருந்த இந்த அறிக்கையை நார்வே நாட்டின் நம்பகத் தன்மையுள்ள ஒரு இணையத்தளம் வெளிப்படுத்தியிருக்கிறது. நார்வே நாட்டின் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் அந்நாட்டின் அணுஉலைகளின் தலைமை பொறியாளர், ரஷ்ய விஞ்ஞானிகளின் இந்த அபாய அறிவிப்பை வெளியே கொண்டுவந்துள்ளார்கள். கூடங்குளம் அணு உலைத் திட்டம் பாதுகாப்பானது என்ற ரஷ்யாவின் உறுதியை - ரஷ்ய விஞ்ஞானிகளின் இந்த அறிக்கை மறுக்கிறது. 'பிரண்ட்லைன்' பத்திரிகையில் அதன் கட்டுரையாளர் பிரஃபுல் பிட்வாய் (அக்.21,2001) இதைப் பதிவு செய்துள்ளார்.

4 ஆம் பக்கம்

### டில்லி பல்கலைக்கழகத்தில் இராமாயண ஆய்வுக் கட்டுரை நீக்கம்

*டில்லி பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் இளங்கலை பட்டப் படிப்பு பாடத் திட்டத்தின் பகுதியாக இருந்த ராமாயணம் குறித்த ஆய்வுக் கட்டுரை இந்துத்துவவாதிகள் சார்புடையவர்களின் எதிர்ப்பு காரணமாக நீக்கப்பட்டுள்ளது. இதை நாட்டின் முன்னணி வரலாற்று அறிஞர்கள் கண்டித்துள்ளனர்.*

*மறைந்த ஏ.கே.ராமானுஜத்தால் எழுதப்பட்ட '300 இராமாயணங்கள் – ஐந்து உதாரணங்கள் – மொழி பெயர்ப்பு குறித்த மூன்று சிந்தனைகள்' என்ற புத்தகத்தில் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் இராமாயண கதைகளில் உள்ள மாறுபாடுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.*

*இதில் வரும் கருத்துக்கள் இந்துக்களை புண்படுத்துவதாக இருப்பதாகக் கூறி ஒருவர் வழக்கு தொடுத்தார். இது குறித்து பல்கலைக்கழகம் முடிவெடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.*

*இதையடுத்து, டெல்லி பல்கலைக்கழகத்தின் கல்விக் குழு இந்த இராமாயணப் பாடத்தை நீக்க முடிவு செய்துள்ளது. கல்விக் குழுவில் இருந்த 120 பேரில் வெறும் 9 பேர்தான் இந்த பாடத் திட்டம் நீக்கப்படுவதை எதிர்த்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது குறித்து டெல்லி பல்கலைக்கழகத்தின் நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியவியல் துறையின் தலைவர் பேராசிரியர் அ.மாரியப்பன், இராமாயணத்தில் வரும் 'அகல்யையின் சாபம்' என்ற கிளைக் கதையில் வரும் சம்பவம் தொடர்பாக ஏ.கே.ராமானுஜத்தின் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களால் பிரச்சினை ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.*

*வால்மீகி இராமாயணத்தில் அகல்யை தானே விரும்பி இந்திரனை அழைத்ததாகவும், அதன் பின் இந்திரன் உடல் ஆயிரம் பெண் குறிகளாக மாறட்டும் என்று சாபமிட்டதாகவும் கூறப்பட்டுள்ளதாகவும் இது வேறு சில இராமாயணங்களில் ஆயிரம் கண்களாக மாற்றப்பட்டுள்ளதாகவும் ஏ.கே. ராமானுஜன் எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சில பெண் பேராசிரியர்கள் இது போன்ற விடயங்களை வகுப்பறையில் பேசுவது தர்மசங்கடத்தை விளைவிக்கும் என்று கருதுவதாகவும் அ.மாரியப்பன் தெரிவித்தார். அப்படிப்பட்ட இராமாயணம் எப்படி புனித காவியமாகும் என்ற கேள்வி எழுகிறது!*

*ஏ.கே.ராமானுஜம் இராமாயணம் குறித்து எழுதிய சிறப்பான கட்டுரை டில்லி மத்தியப் பல்கலைக் கழகத்தால் தடை செய்யப்பட்டுள்ளமை அனைவருக்கும் வெட்ககரமான செய்தி என்று சாகித்ய அக்காடமி விருது பெற்றுள்ள முன்னணி கன்னட எழுத்தாளர் யு.ஆர்.அனந்தமூர்த்தி கூறினார்.*

**(உள்ளே: இராமன் எத்தனை இராமனடி கட்டுரை)**

# ‘இராமன்’ எத்தனை ‘இராமனடி’?

*300க்கும் மேற்பட்ட இராமாயணக் கதைகள் இருக்கின்றன என்பதிலிருந்தே இராமாயணம் வரலாறு அல்ல; கற்பனை; பார்ப்பனப் புனைவு என்ற முடிவுக்கு வந்து விடலாம். இந்த உண்மையை பாடமாக வைப்பதற்கே டெல்லி பல்கலையில் பார்ப்பன இந்துத்துவ சக்திகள் எதிர்த்து பாடத்தை நீக்கச் செய்துவிட்டன. பல்வேறு இராமாயணக் கதைகளை இங்கு தொகுத்துத் தந்துள்ளோம்.*

காட்டுமிராண்டி காலத்து கற்பனைக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வடிவம்தான் இராமாயணம். இது நடந்து முடிந்துவிட்ட சரித்திரக் கோவை அல்ல, சனாதானிகள் தங்களின் சதிச் செயலுக்கு பயன்படுத்திய ஒரு கருவி. வீதி ஓரத்துக் கூத்துக் களிலே, வீட்டுத் திண்ணைகளில் கூறப்படும் பாட்டிக் கதைகளிலே, கருவாக விளங்கிய இந்தக் கற்பனை பிறகு உருபெற்றது நூலாக! மதவாதிகளின் மன ஓட்டம், கதையாசிரியர்களின் கை வண்ணத்துக்கு ஏற்ப, இந்தக் கற்பனை பெற்று வந்துள்ள உருமாற்றங்கள் ஏராளம்.

உலக நாடுகளிலே எத்தனையோ மொழி இலக்கி யங்கள் அந்நாட்டு மக்களால் போற்றப்படுகின்றன; படித்துப் பாராட்டப்படுகின்றன. ஆனால் பூஜை அறையிலே வைத்து வணங்கப்படுவதில்லை. இந்த நாட்டிலேதான், இந்தக் கற்பனைக்கு தெய்வமுலாம் பூசி அதை வழிபாட்டுப் பொருளாகவும் ஆக்கிய அருவருப்பான நிலை.

நடந்த கதையல்ல இராமாயணம் என்பதற்கு அடுக்கடுக்கான ஆராய்ச்சிக் கணைகளை அள்ளி வீசியவர் தந்தை பெரியார். உண்மை வரலாறு என்றிருந்தால், ஒன்றுதானே இருந்திருக்க முடியும். வரலாறுகள் தனி மனிதனின் மூளையிலே உதிக்கக் கூடிய கற்பனை நிகழ்ச்சிகள் அல்ல! ஆனால் இராமாயணத்திலே காலத்துக்கு ஒருவிதம், இடத்துக்கு ஒருவிதம் புனையப்பட்டிருப்பதி லிருந்தே இது அவிழ்த்து விடப்பட்டுள்ள பொய் களின் மூட்டை என்பதற்குப் போதிய சான்றாகும்.

**எத்தனை இராமாயணங்கள்?**

இந்துக்களில் வடமொழியில் எழுதப்பட்ட இராமாயணங்களின் பட்டியலே நீண்டது. சமண இராமாயணம், வால்மீகி இராமாயணம், வசிட்ட இராமாயணம், ஆனந்த இராமாயணம், அத்யாத்ம இராமாயணம், லகு இராமாயணம், அற்புத இராமாயணம், பார்த்துவாஜ இராமாயணம், சோர இராமாயணம், பால இராமாயணம், இரகு வம்ச இராமாயணம், போதாயன இராமாயணம், அக்னிவேஸ்ய இராமாயணம், யோக வசிட்ட இராமாயணம், சஸ்கிரத இராமாயணம் - இவைகள் குறிப்பிடத் தகுந்தவைகள் மட்டும்; இன்னும் பட்டியல் நீண்டு கொண்டு போகும். இவைகளிலே ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான கதைகள் கூறப்படுகின்ற வினோதத்தைப் பார்க்கிறோம்.

சமணர்கள் கன்னட மொழியில் எழுதியுள்ள இராமாயணங்களின் பட்டியல் - பம்ப இராமாயணம், குமுதேந்து இராமாயணம், ஜைன இராமாயணம், இராமவிஜயதரிசம், இராம கதாவதாரம், திரிசஷ்டி மகாபுருகுண அலங்காரம், ஜீவ சம்போதனை - இப்படிப் பட்டியல் நீண்டு போகும். இன்னும் பவுத்த இராமாயணம், கிறிஸ்துவ இராமாயணம், வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம் - இப்படிப் பலவகை.

இராமனும் சீதையும் கணவன் மனைவியாக ஒரு இராமாயணம்! அவர்களே சகோதர சகோதரி களாக ஒரு இராமாயணம்! சீதை இராமனின் சகோதரியாக இருந்தும், அவளையே திருமணம் செய்து கொண்ட தாக ஒரு இராமாயணம்! இராமன் மகாவீரனாக ஒரு இராமாயணம்! இராமன் குஷ்டரோகியாக ஒரு இராமாயணம்! இப்படி குழப்பங்கள், முரண் பாடுகள், மாறுபாடுகள். இவைதான் இராமாயணம்!

ஒரு சில இராமாயணத்தின் கதைகளை மட்டும் இங்கே பார்ப்போம்.

**சமண இராமாயணம்!**

சமண இராமாயணத்தில் கூறப்படும் கதை இது:

1) தனக்கு யாரால் சாவு வரும் என்று நாரதனிடம் இராவணன் குமாரன் கேட்கிறான். அயோத்தி மன்னன் தசரதனாலும், ஜனகன் மகளாலும் சாவு வரும் என்று நாரதன் கூற, அந்த அரசர்களுக்குக் குழந்தையே பிறக்காமல் தடுக்க அவர்களைக் கொலை செய்ய தனது சகோதரன் விபீடணனை அனுப்புகிறான் இராவணன்.

2) நாரதன் இந்த வரத்தை தசரதன், ஜனகன் ஆகியோரிடமும் சென்று கூற, அந்த மன்னர்கள் தங்கள் உருவத்தை சிம்மாசனத்தில் செய்து வைத்துவிட்டு யாத்திரைப் போய் விடுகிறார்கள். பொம்மை உருவத்தை உண்மை மன்னர்கள் என்று நம்பி வெட்டிச் சாய்த்து விட்டு, இராவணனிடத்தில் வெற்றிச் செய்தியைக் கொண்டு வந்தான் விபீடணன்.

3) யாத்திரை முடித்த தசரதன், தனது பத்தினிப் பெண்டிர்களோடு வசித்து வரும்போது தனக்கு மிகவும் உதவி புரிந்த பத்தினிப் பெண்டிர்களில் ஒருவளான கைகேயிக்கு இரண்டு வரம் அளித்தான்.

4) தசரதனின் மூத்த மனைவிக்குப் பிறந்த நான்கு பிள்ளைகளில் மூத்தவனுக்கு தாமரையின் பெயராக பத்மன் அல்லது ராமன் என்று பெயரிட்டான்.

5) தசரதனின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்த வனுக்கு நாராயன் அல்லது லட்சுமணன் என்று பெயரிட்டான்.

6) அதரங்கமண் என்பவன் ஜனகன் மீது படையெடுக்க, ஜனகனுக்கு உதவியாக தனது தந்தையின் ஆணைப்படி, இராமன் சென்று எதிரியைத் தோற்கடித்தான்.

7) இராமனுக்குச் சீதையைத் திருமணம் செய்விக்க ஜனகன் விரும்பினான். சீதையைப் பார்க்க நாரதன் சென்றபோது, அவனது கோர உருவத்தைக் கண்டு சீதை ஓட நாரதன் ஆத்திர மடைந்து, பரமண்டலன் என்பவனைசீதையைக் கடத்திப் போகுமாறு தூண்டினான். இறுதியில் வில்லை உடைத்து இராமன் சீதையை மணந்தான்.

8) லட்சுமணன் வித்யாவசம்பத்தில் பிறந்த 18 சகோதரிகளையும் திருமணம் செய்து கொண்டான்.

9) பரதன் ஜனகரின் சகோதரன் மகளை திருமணம் செய்து கொண்டான். அதாவது சீதையின் ஒன்றுவிட்ட சகோதரி.

10) கைகேயிற்கு தசரதன் கொடுத்த வரப்படி, இராமன், இலட்சுமணன், சீதை ஆகியோர் காடேகின்றனர்.

11) இராமன் விஜயபுரம் என்ற இருட்டடிக்கப் பட்ட தோட்டத்தில் இருக்கையில், ஒரு பெண் தற்கொலை செய்யப் போவதைத் தடுத்து, காரணம் யாது என்று கேட்க, அந்தப்பெண் இலட்சுமணனை தான் அடைய விரும்புவதாகக் கூறவே, இலட்சுமணன் அவளையும் திருமணம் செய்து கொண்டு அவர்கள் பெற்றோர்கள் வீட்டிலே விட்டுவிடுகிறான். பிறகு ஜீதபத்மா என்ற இளவரசியை இலட்சுமணன் திருமணம செய்து, மலைப் பகுதியில் இருக்கும் இரண்டு பார்ப்பனர்களுக்கு மோட்சம் அளிக்கிறான்.

12) சூர்ப்பனகை தன் மகன் கொல்லப்பட்டதை இராமனிடமே முறையிட வரும்போது இராமன் மீது காதல் கொண்டு திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்ட, இராமன் அவளை அலட்சியப்படுத்துகிறான். ஆத்திர மடைந்த சூர்ப்பனகை தனது சகோதரன் இராவணனிடம் சென்று முறையிட்டு இராமனையும், இலட்சுமணனையும் யுத்தம் செய்து கொல்லுமாறு வேண்டுகிறாள்.

13) சூர்ப்பனகையின் மகன் சம்பூகன். இவன் விசேச சக்தியுள்ள ஒரு கத்தியை அடைய மூங்கில் புதரில் தவம் செய்கிறான். இலட்சுமணன் அந்த தவம் வெற்றிப் பெற்றால் நாட்டுக்கு கேடு உண்டாகும் என்று இராமனிடம் கூற, இராமன் அந்த கத்தியாலே சம்பூகனை கொன்றான்.

14) இராவணன் சீதையைத் தூக்கிச் செல்கிறான்.

15) சுக்ரீவன் மனைவியை அடைய, அவனைப் போல உருவமெடுத்து வந்தான் ஹைஜாதி என்பவன். சுக்ரீவன் இதைப் பார்த்து, உண்மையான சுக்ரீவனும் மாயா சுக்ரீவனும் சண்டையிட, இராமன் தலையிட்டு மாயா சுக்ரீவனைக் கொன்றான். நன்றிக் கடனாக சுக்ரீவன் இராமனுக்காக சீதையைத் தேட ஆரம்பித்தான்.

16) இலங்கைக்கு சீதையிடம் தூது போன அனுமானை இராவணன் பிடித்துக் கொள்ள, அனுமான் இராவணனை வசைபாடி, அவன மகுடத்தை உடைத்து இலங்கையை அழித்து விட்டு திரும்பினான்.

17) இராம, இராவண யுத்தத்தில் இராவணன் தோற்றான். விபீடணன் இலங்கை அரசனானான். இராமன் அயோத்தி அரசனாகி சீதை, பிரபாவதி, ரதீனியா, ஸ்ரீதாமா என்ற பெண்களை மனைவியாகக் கொண்டு குடும்பம் நடத்தினான்.

18) இலட்சுமணன் அரசாளவில்லை. எட்டு மனைவிகளுடனும் அவர்களுக்குப் பிறந்த 250 குழந்தைகளுடனும் குடும்பம் நடத்தி வந்தான்.

இதுதான் சமண இராமாயணக் கதை.

**பவுத்த இராமாயணம்:**

பவுத்தத்திலேயே பல இராமாயணக் கதைகள் உள்ளன. அதில் புத்தர் தனது சீடர்களைப் பார்த்துக் கூறியதாக கீழ்க்கண்ட கதை கூறப் படுகிறது.

**ராமன் – சீதை சகோதரர்கள்!**

1) காசி நாட்டை ஆண்ட தசரதனின் பதினாயிரம் மனைவிகளில் மூத்த மனைவிக்கு இராமன், இலட்சுமணன், சீதை ஆகியோர் பிறந்தனர்.

2) மூத்த மனைவி இறந்த பிறகு இன்னொரு மனைவியை ராணியாக்கியதும், அவனுக்குப் பரதன் பிறந்தான்.

3) பரதன் தாய், தசரதன் கொடுத்த வரத்தைக் காட்டி பரதனுக்கு முடி சூட்ட வேண்டும் என்று கூறுகிறாள். (இராமனைக் காட்டுக்கு அனுப்புமாறு கூறவில்லை)

4) இவனால் தனது மூத்த மனைவியின் மக்களுக்கு ஆபத்து வரலாம் என்று அஞ்சிய தசரதன், அவர்களைக் காட்டுக்கு அனுப்பினான். சோதிடன் தசரதனுக்கு 12 ஆண்டுகள் ஆயுளை நிர்ணயிக்க,12 ஆண்டுகள் கழித்து, தான் இறந்த பிறகு வந்து நாட்டை ஆளுங்கள் என்று தசரதன் கூறினான்.

5) தசரதன் 9 ஆண்டுகளில் இறக்கவே (சோதிடம் பொய்த்தது) பரதனுக்கு முடிசூட்ட ஏற்பாடுகள் நடந்தது. அமைச்சர்கள் ஆலோசனைப்படி, பட்டாபிஷேகத்திற்கு ராமனை அழைக்க பரதன் காட்டுக்கு வருகிறான்.

6) தனது தந்தை இறந்த செய்தி கேட்டு இராமன் கலங்கவில்லை. சீதை, இலட்சுமணர்களிடம் தந்தை இறந்த செய்தியை தண்ணீரில் நிற்க வைத்து (அப்போதுதான் அதிர்ச்சி அடைய மாட்டார்களாம்) கூறவே, அவர்கள் மயக்க முற்றனர். இராமன் மட்டும் அதிர்ச்சி அடையாததற்குக் காரணம் ஏன் என்று பரதன் கேட்க, சாவு என்பது இயற்கை என்று இராமன் உபதேசம் செய்கிறான். (இது புத்தமதக் கொள்கை. அதைப் பரப்பவே இந்தக் கதை என்பது விளங்கும்)

7) இராமன் தன்னுடைய சகோதரி சீதை, சகோதரன் இலட்சுமணன் ஆகியோரை பரதனோடு நாட்டுக்கு அனுப்பி தான் மட்டும் தந்தைக்கு வாக்குறுதி அளித்தபடி 12 ஆண்டுகள் கழித்து வருவதாகவே கூறுகிறான். (செருப்பைக் கொடுத்து அனுப்பவில்லை) ராமன் நாடு திரும்பிய பிறகு சீதையை நாட்டுக்கு அரசியாக் கினான்.

(தொடரும்)

## 'தூக்கு'ப் போட மனிதர்கள் இல்லை

தூக்குத் தண்டனை என்ற காட்டுமிராண்டி தண்டனையை இந்தியப் பார்ப்பன ஆட்சி கைவிட மறுத்தாலும், அந்தத் தண்டனையை நிறைவேற்றக் கூடிய மனிதர்கள் நாட்டில் இல்லை. கடைசியாக 2004 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் தேதி சிறுமியை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி கொலை செய்த தனஞ் செய் சட்டர்ஜி என்பவர் கல்கத்தா வில் தூக்கிலிடப்பட்டார். அவரைத் தூக்கில் ஏற்றியவர் பெயர் நாட்டா மல்லிக்.
25 ஆண்டுகாலமாக நூற்றுக்கும் மேற்பட்டவர்களை தூக்கில் போட்டவர் மல்லிக்.
கடந்த 2009 டிசம்பர் 14 அன்று மல்லிக் மரணமடைந்துவிட்டார். மல்லிக்கின் தந்தை ஷிப்லால் என்பவரும் தூக்கில் போடும் "வேலை"யைத் தான் செய்து வந்தார். தூக்கிலிட்டு சாகடிக்கும் சட்டத்தின் ஆணையை நிறைவேற்றிய இவர்கள், அரசு ஊழியர்கள் அல்ல. அரசு எந்த உதவியையும் தனது தந்தைக்கு செய்ததில்லை என்கிறார், மல்லிக்கின் மகன் மகாதேவ்.

பிரிட்டிஷ் ஆட்சியில் தான், தூக்கில் ஏற்றுவதற்காக ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர். 'சுதந்திரத்துக்குப்' பிறகு இந்தப் பணி முற்றிலும் ஒழிக்கப்பட்டது என்றாலும், தூக்குத் தண்டனை மட்டும், சட்டத்தில் 'உயிரோடு' இருக்கிறது. ஜோகி ஜோசப் என்ற ஆவணப்பட இயக்குனர், "தூக்கிலிடுபவரின் வாழ்க்கையில் ஓர் நாள்" என்ற ஆவணப்படம் ஒன்றை தயாரித்தார். அந்த ஆவணப்படம் மூலம் கிடைத்த வருவாயை தூக்கு 'வேலை' செய்த மாலிக் குடும்பத்தினருக்கு வழங்கினார். அந்த வருவாய் மட்டுமே பலரின் 'வாழ்க்கையை' முடித்து வைத்த மாலிக் குடும்பத்துக்கு 'வாழ்க்கை' தந்தது. இப்போது இந்தியாவில் தூக்குத் தண்டனையை நிறைவேற்றக் கூடிய – அதில் அனுபவம் கொண்டவர்கள் எவரும் இல்லை. ஆந்திராவிலே தூக்குத் தண்டனைக்கு எதிரான ஒரு வழக்கில் தூக்கில் போடக்கூடிய முறையான பயிற்சிப் பெற்றவர்கள் இல்லை என்ற காரணத்தின் அடிப்படையில், ஆந்திர உயர்நீதிமன்றம் தூக்குத் தண்டனையை நிறுத்தி வைத்தது. பாழடைந்து கிடக்கும் வேலூர் சிறைக் கொட்டடியை புதுப்பிக்க சிறை அதிகாரிகள் வேலூர் பகுதி தொழிலாளர்களை அழைத்த போது அவர்கள் 'இந்த வேலைக்கு நாங்கள் தயாரில்லை' என்று மறுத்துவிட்டனர். மனித நேய மிக்க இத் தொழிலாளர்களைப் பாராட்ட வேண்டும்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# மூவர் தூக்கு: முடிவெடுத்தது யார்?

பேரறிவாளன், முருகன், சாந்தன் - மூன்று தமிழர்களின் கருணை மனுக்களைத் தள்ளுபடி செய்யலாம் என்று குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்தது, மத்திய அமைச்சரவையின் முடிவு அல்ல; அது உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தன்னிச்சையாகவே எடுத்த முடிவு என்ற உண்மை இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. தற்போது காங்கிரஸ் கட்சியிலுள்ள திருச்சி வேலுசாமி, மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் விளக்கம் கேட்டிருந்தார். முதலில் பதிலளிக்காமல், உள்துறை அமைச்சகம் காலம் தாழ்த்தியது. நீதிமன்றம் போகப்போவதாக வேலுசாமி மீண்டும் எழுதினார். அதன் பிறகு கடந்த செப்டம்பர் 30 ஆம் தேதி உள்துறை அமைச்சகம் தந்த பதிலில் பலவிதமான ஆலோசனைகளுக்குப் பிறகு உள்துறை அமைச்சகம் இந்த முடிவை எடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. மத்திய அமைச்சர்கள் எவரிடமும் கலந்து பேசியதாகக் குறிப்பிடப் படவில்லை. மத்திய அமைச்சரவை கூடி விவாதித்து குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைக்க வேண்டும் என்பதே சட்ட நடைமுறையாகும்.

### வாக்களிக்க தடை

கமுதி அருகே மண்டல மாணிக்கம் பஞ்சாயத்தைச் சேர்ந்த பேச்சேரி (பள்ளப்பச்சேரி) கிராமத்தைச் சார்ந்த பழனிக்குமார் என்ற 16 வயது பள்ளி மாணவன், சாதி வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அக் கிராம மக்கள் பஞ்சாயத்து தேர்தலை புறக்கணித்ததாக செய்திகள் வந்தன. சாதி ஆதிக்கவாதிகள் வாழும் மண்டல மாணிக்கத்திலிருந்து பேச்சேரிக்கு நேரடியாக சாலை வசதி கிடையாது. தாழ்த்தப்பட்ட மக்கள் போக்குவரத்தைத் தடை செய்வதே இதன் நோக்கம். கமுதி பஞ்சாயத்துக்கான தலைவரை இவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். இது 'ரிசர்வ்' தொகுதி. இதற்கு சாதி ஆதிக்கவாதியினருக்கு தலையாட்டக்கூடிய ஒரு தலித் வேட்பாளரை ஆதிக்கசாதியினரே தேர்ந்தெடுத்து, வேறு எவரும் போட்டியிட விடாமல் தடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்தப் பதவிக்கு ரூ.15 லட்சம் விலை நிர்ணயித்து, ஏலம் விட்டு, பணத்தை பங்கு போட்டுக் கொண்டு விட்டார்களாம்.

இந்த நிலையில் பேச்சேரி வாக்காளர்கள் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்க ஆளும் கட்சிக்கு எதிராக வாக்களிக்க விரும்பியதாகவும் அவர்கள் தேர்தலைப் புறக்கணிக்க விரும்பவில்லை என்றும், ஆதிக்க சாதியினரே வாக்களிக்க விடாமல் தடுத்ததாகவும் அதே கிராமத்தைச் சார்ந்த அர்ஜுனன் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மனுவை நீதிபதி வி.இராமசுப்ரமணியன் விசாரணைக்கு ஏற்று மாவட்டத் தலைவர் மற்றும் காவல்துறை அதிகாரிக்கு விளக்கம் கேட்டு தாக்கீது அனுப்பியுள்ளார்.

### இதுவே முதல் ஓட்டு

நாடாளுமன்றம், சட்டமன்றத் தேர்தல்களுக்கு எல்லாம் வாக்களிக்க இவர்களுக்கு தடை இல்லை. ஆனால் பஞ்சாயத்து தேர்தலில் மட்டும் "பள்ளர்கள்" என்ற ஒடுக்கப்பட்ட மக்கள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டு வந்தது. இந்தத் தடையை 40 ஆண்டுகளாக பார்ப்பனீயத்தில் மூழ்கிக் கிடக்கும் ஆதிக்கசாதியினர் கிராமப்பட்டி என்ற கிராமத்தில் நடைமுறைப்படுத்தி வந்தனர். மதுரை மாவட்டம் செல்லம்மாப்பட்டி ஒன்றியம் கோவிலங்குளம் ஊராட்சியின் கீழ் வரும் கிராமப்பட்டி கிராமத்தில் 40 ஆண்டுகாலத் தடை இந்தத் தேர்தலில் முதன்முதலாக



தகர்ந்தது. அப்பகுதி ஆதிக்கசாதியினரான பிறன்மலை கள்ளர் என்ற பிரிவினரே இந்த 'பள்ளர்' மக்களின் வாக்குகளைப் போடுவது வழக்கமாக இருந்தது. இம்முறை மாவட்ட ஆட்சித் தலைவர் சகாயத்திடம் தங்களது உரிமை பறிக்கப்படுவதை கிராம மக்கள் புகாராகக் கூறியதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் தலையீட்டால் வாக்களிக்கும் உரிமை முதன்முதலாக அம்மக்களுக்கு கிடைத்துள்ளது.

### இது, என்ன இரட்டைவேடம்?

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்துவரும் நிலையில் அது இரஷ்ய நாட்டின் திட்டம் என்பதற்காக தமிழ்நாடு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. கூடங்குளம் திட்டத்தால் மக்களுக்கு ஆபத்து வராது என்று விளக்கும் கட்டுரைகளை 'தீக்கதிர்' நாளேடு தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. ஆனால், இதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மகாராஷ்டிரா மாநிலம் ஜெய்தாபூரில் அணுமின் திட்டத்தை எதிர்த்துப் போராடும் மக்களுக்கு ஆதரவாக களமிறங்கியுள்ளது. காரணம், அது பிரான்சு நாட்டு அணுமின் திட்டம் என்பதால்! பிரான்ஸ் நாட்டின் ஆரிவா என்ற நிறுவனத்திடமிருந்து இந்தியா ஜெய்தாப்பூர் அணுமின் நிலையத்துக்கு ஆறு அணு உலைகளை வாங்கியுள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஜெய்தாப்பூர் நகரைச் சுற்றி விவசாயிகளும், மீனவர்களும் தங்கள் வாழ்விடங்களைக் காலி செய்யுமாறு, அரசு மிரட்டுகிறது. இத்திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று போராடும் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆரிவா நிறுவனம் தயாரித்துள்ள அணுஉலைகள் இதுவரை எங்கும் இயங்கியதில்லை. முதன்முதலாக ஜெய்தாபூரில்தான் செயல்படப்போகிறதாம். சொந்த நாடான பிரான்சிலேகூட அது இயங்கவில்லை. அதன் தொழில்நுட்பத்தை சோதித்துப் பார்க்காத நிலையிலேயே மன்மோகன் அரசு மராட்டிய மாநில மக்கள் மீது திணிக்கிறது, கூடங்குளத்தைப் போல்!

போராட்டக் குழுவில் மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் பிரகாஷ்காரத் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் ஏ.பி.பரதன், சீத்தாராம் எச்சூரி உள்ளிட்ட பல்வேறு கட்சியினரும் இடம் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை கூடங்குளம் திட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் போல் வெளிப்படையாக ஆதரிக்கவில்லை. ஜெய்தாபூருக்கு ஒரு நீதி; கூடங்குளத்துக்கு ஒரு நீதி போலும்!

# ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (4)

*ராஜீவ் காந்தி ஈழத்துக்கு அனுப்பி வைத்த இந்திய ராணுவம் 1987 ஆம் ஆண்டில் நிகழ்த்திய போர்க் குற்றங்கள், இனப் படுகொலைகள் பற்றிய ஒரு தொகுப்பு:*

யாழ் மருத்துவமனையை இந்திய அமைதி காக்கும் படையினர் சுற்றி வளைத்துள்ளதால் காயமடைந்தவர்களை சிகிச்சைக்குக் கொண்டு செல்ல முடியாமல் மக்கள் தவிக்கிறார்கள். காயமுற்று மருத்துவமனையில் இருக்கும் நோயாளிகள் மருத்துவ வசதியின்றி இறக்கிறார்கள். டாக்டர்கள் தாதிகள் உட்பட ஏராளமான மருத்துவமனை ஊழியர்கள் பீதியினால் மருத்துவமனையில் இருந்து வெளியேறி வருகின்றனர். மருத்துவமனையிலும் வெளியிலும் இறந்த பொது மக்களின் பிணங்கள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. நாய்களும் காகங்களும் பிணத்தைக்கொத்தித் தின்னும் அவல நிலை ஏற்பட்டுள்ளன. யாழ் நகரெங்கும் பிணவாடை வீசுகிறது. சென்ற இடமெல்லாம் இடிபாடுகளாகக் காட்சியளிக்கிறது. 21 ஆம் தேதி நடந்த செல் தாக்குதலில் மட்டும் 100 பொது மக்கள் காயமுற்றுள்ளனர்.

யாழ் குடா நாட்டில் இதுவரை எப்போதும் ஏற்படாத அளவுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 21 ஆம் தேதி மட்டும் 700க்கும் மேற்பட்ட மோட்டார் செல்கள் இந்தியப் படையினரால் ஏவப்பட்டது. இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இறந்தவர்கள், காயமடைந்தவர்களைத் தூக்கிச் செல்வதற்குக்கூட முடியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர். இறந்தவர்களின் உடல்கள் ஆங்காங்கே வீதிகளில் கிடக்கின்றன. காயமடைந்தவர்கள் மருத்துவ வசதியின்றி இறந்து கொண்டிருக்கின்றனர்.

யாழ் மருத்துவமனைக்கு அருகில் சண்டை நடப்பதால் டாக்டர்களும், தாதிமாரும் மருத்துவமனைக்குச் செல்ல முடியவில்லை. யாழ்குடா நாட்டில் இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக அவதியுறுகின்றனர்.

(தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# மேட்டூரில் ‘இந்து மக்கள் கட்சி’ மிரட்டலை, கழகம் முறியடித்தது

மேட்டூரில் கடந்த ஆண்டைப் போலவே அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களில் ஆயுத பூசை கொண்டாடுவது அரசாணைக்கு எதிரானது என வலியுறுத்தி, அனைத்து காவல் நிலையங்கள் உட்பட அனைத்து அலுவலகங்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டதால், இந்த ஆண்டு அரசு அலுவலகங்களில் ஆயுத பூசை கொண்டாடுவது கட்டுப்படுத்தப்பட்டது.

கடந்த ஆண்டு ஆயுத பூசையின்போது மேட்டூர் காவல் நிலையத்தில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக இந்த ஆண்டு மேட்டூர் காவல் நிலையத்தில் ஆயுத பூசை போடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 5.10.2011 புதன் காலை மேட்டூர் காவல்நிலையத்திற்கு நாங்கள் ஆயுத பூசை போடுவோம், அரசு அலுவலகங்களிலுள்ள பெரியார் படங்களை அகற்றுவோம் என முன்கூட்டியே பத்திரிகை, தொலைக்காட்சிகளுக்கு செய்திகள் கொடுத்துவிட்டு விளம்பர நோக்கோடு இந்து மக்கள் கட்சியைச் சார்ந்த அய்ந்து ஊர்களைச் சேர்ந்த ஆறு நபர்கள் மேட்டூர் நோக்கி வந்தனர். இதை முன்கூட்டியே பத்திரிகையாளர்கள் மூலம் அறிந்த காவல்துறை மேட்டூர் எல்லையில் அந்த நபர்களை கைது செய்தது. உடனே காவல் நிலையத்திற்கு ஆயுத பூசை போடவந்த இந்து மக்கள் கட்சியினர், ‘ஒழிப்போம் ஒழிப்போம் பெரியார் தி.க.வை ஒழிப்போம்’ என குரல் எழுப்பி வந்ததை அறிந்த மேட்டூர் கழகத் தோழர்கள் மாவட்ட தலைவர் முல்லை வேந்தன் தலைமையில் எதிர் நடவடிக்கையில் இறங்கினர். இந்து மக்கள் கட்சி தடுத்து வைக்கப்பட்ட மண்டபத்தின் நுழைவு வாயிலுக்குச் சென்று, “இந்து என்று சொல்லாதே! இழிவைத் தேடிக் கொள்ளாதே! எங்கள் நாடு தமிழ்நாடு! இங்கு ஏதேடா இந்து நாடு. எங்கள் நாடு பெரியார் நாடு! பார்ப்பன அடிவருடிகளே வெளியேறு!” என்ற முழக்கங்களோடு தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். இதைக் கண்டு பதட்டமான மேட்டூர் காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையிலான காவல்துறையினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தோழர்களை கைது செய்து மேட்டூரிலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ள ராமன் நகர் பகுதியிலுள்ள திருமண மண்டபத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாவட்ட தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட பொருளாளர் பெ. ஆசைத்தம்பி, மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, முன்னாள் மாவட்ட பொருளாளர் கோவிந்தராசு, ஆர்.எஸ். பகுதி தலைமைக்குழு உறுப்பினர் பிரபு, செல்வம், ஆர்.எஸ். பகுதி மாணவரணி யுவராஜ், நங்கவள்ளி இராசேந்திரன், சிவக்குமார், அருண்குமார் மற்றும் தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

செய்தி அறிந்த சேலம் மேற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பொறுப்பாளர்களும், தோழர்களும் மேட்டூரில் திரண்டனர். இதனால் மேட்டூரில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டதால் காவல்துறை குவிக்கப்பட்டு மேட்டூரே பரபரப்பாகியது.

கடந்த ஆண்டு மேட்டூர் காவல் நிலையத்தில் ஆயுத பூசை போடுவது தடைபட்டதால் காவல் நிலையத்தில் புனித பூசை போடவந்த இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத், கழகத் தோழர்கள் முயற்சியில் விரட்டி அடிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் பக்கத் தொடர்ச்சி

2) ஜப்பானில் புக்குஷிமாவுக்குப் பிறகு அந்நாட்டின் அணுஉலை தயாரிப்பு நிறுவனங்கள், தங்கள் தயாரிப்புகளை வியட்நாம் போன்ற நாடுகளுக்கு விற்பனை செய்ய முயன்று வருகின்றன. இதை ஜப்பான் நாட்டின் அணுஉலை எதிர்ப்பாளர்கள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். உள்நாட்டில் அணு உலைகளைப் புறக்கணித்துவிட்டு, வெளிநாடுகளுக்கு அதை விற்பனை செய்யலாமா என்ற கேள்வியை ஜப்பான் நாட்டின் ஆளும் கட்சி, எதிர்க் கட்சியிலிருந்தும் கேட்கத் தொடங்கியுள்ளனர். புக்குஷிமாவுக்குப் பிறகு ஜப்பானில் அணுமின் தொழிற்சாலைகள் மிகக் குறைந்த அளவிலேயே செயல்பட்டு வருகின்றன. ஜப்பானிலுள்ள 54 அணுமின் நிலையங்களில் 5 இல் ஒரு மின் நிலையம் மட்டுமே இப்போது இயங்கி வருகின்றன. அய்ரோப்பாவிலேயே மிகப் பெரும் நிறுவனமான ‘சீமென்ஸ்’ (Siemens) நிறுவனம் ‘மூனிச்’ நகரை தலைமையகமாகக் கொண்டு செயல்படுகிறது. அணுமின் நிலையங்களை படிப்படியாக மூடுவதற்கு ஜெர்மன் முடிவெடுத்ததைத் தொடர்ந்து ‘சீமென்ஸ்’ அணு உலைத் தயாரிப்புகளை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது. (அக்.20, 2011 ‘இந்து’ நாளேட்டில் வெளிவந்த கட்டுரை இத் தகவல்களைத் தெரிவிக்கிறது.)

3) பிரான்ஸ் நாட்டில் ஒரு அணுமின் நிலையம் கழிவுகளை நீராவி வழியாக திருட்டுத்தனமாக வெளியேற்றிய குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கு அந்நாட்டு நீதிமன்றம் பெரும் தொகையை அபராதமாக விதித்திருக்கிறது.

4) 2009 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் தேதி கர்நாடக மாநிலம் கைகா அணுமின்நிலையத்தில் நேர்ந்த கதிர்வீச்சு காரணமாக 90 ஊழியர்கள் பாதிக்கப்பட்டதை மூடி மறைக்க முயற்சி நடந்தது. நவம்பர் 28 ஆம் தேதி பாதிக்கப்பட்ட ஊழியர்கள் வழியாக செய்தி வெளியே தெரிந்தது. அப்போது ‘கைகா’ திட்ட இயக்குனர் ஏ.என்.குப்தா, ஒரு உண்மையை போட்டு உடைத்தார். அணு உலைக்கு வெளியேதான், இந்த ஊழியர்கள் இருந்தனர். அப்போதும் அணுக்கதிர் வீச்சி லிருந்து அவர்கள் தப்பிக்க முடியாமல் போய் விட்டது என்று உண்மையை கூறினார். இயக்குனர் இப்படி வெளிப்படையாகவே பேசியதால் அதிர்ச்சி அடைந்த அணுசக்தி ஆணையம். அந்த அதிகாரியை அழைத்து இப்படி வெளிப் படையாக பேசுவது கூடாது என்று கண்டித்தது.

5) இந்தியாவிலுள்ள 20 அணு மின் நிலையங்களில் 10 ஆண்டுகளாக மின் உற்பத்தியில் துணைப் பொருளாக வெளிப்படும் ‘புளூட்டேனியம்’ என்ற அணுகுண்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருளை இந்தியா எதற்கு கையாண்டு வருகிறது என்பது ‘மர்மமாகவே’ இருக்கிறது. புளூட்டேனியத்தைக் கொண்டு கல்பாக்கத்தில் ‘வேகஅணுமின் ஆலை’ அமைக்கப் போவதாக இப்போதுதான் அறிவித்திருக்கிறார்கள்.

6) அணுஉலைகள் ஆயுட்காலம் 30 ஆண்டுகள். மேலும் 30 ஆண்டுகள் நீடிக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் எப்படி மூடப் போகிறார்கள் என்பது விடை தெரியாத கேள்வி. அணு உலை தொடங்குவதைவிட அதன் பயன்பாடு முடிந்த பிறகு நிறுத்துவதற்கு பல மடங்கு செலவாகும் தயாரிப்பில் வெளியாகும் கழிவுகளை எப்படி வெளியேற்றப் போகிறார்கள் என்பதற்கு விடை தெரியவில்லை. அணுமின் சக்தியில் அடங்கியுள்ள சர்வதேச அரசியல் - மனித உரிமை - வாழ்வுரிமை அம்சங்கள் அத்தனையும் மக்களுக்கு, தமிழர்களுக்கு எதிரான கேடு. பார்ப்பனர்கள் தீவிர ஆதரவு காட்டுவதிலிருந்தே நாம் விழித்துக் கொள்ள வேண்டும்.

- என்று விடுதலை இராசேந்திரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

## தோழர் வே. ஆனைமுத்து, பசு. கவுதமனுக்கு பெரியார் விருது–பொற்கிழி

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பெரியார் உயராய்வு மய்யம், ‘பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்’ நூலின் பதிப்பாசிரியர் வே. ஆனைமுத்து அவர்களுக்கு பெரியார் சிறப்பு விருதும், ஒரு லட்சம் பொற்கிழியும் வழங்கப்பட்டது. பெரியார் பற்றிய நூல்களை வெளியிட்டுள்ள பெரியார் திராவிடர் கழகத் தோழர் பசு. கவுதமனுக்கு ரூ.50,000 பொற்கிழியும், சமநீதிக்குப் பாடுபடும் அரக்கோணம் கிராமப் பெண்கள் விடுதலை இயக்கத் தலைவர் பர்னாட் பாத்திமா நடேசனுக்கு ரூ.50,000 பொற்கிழியும் வழங்கப்பட்டது. 17.9.2011 சனிக்கிழமை பல்கலைக்கழக அரங்கில் பல்கலை துணைவேந்தர் இதை வழங்கினார்.


## கழகத்தின் புதிய வெளியீடுகள்




பக்கம்: 104
விலை ரூ.50/-





பக்கம்: 48
விலை ரூ.20/-




பக்கம்: 112
விலை ரூ.60/-




பக்கம்: 31 - விலை ரூ.10/-




பக்கம்: 32 - விலை ரூ.10/-

## கழகத்துக்கு புதிய தலைமையகம்

பெரியார் திராவிடர் கழகத்தின் புதிய தலைமையகம் சென்னையில் செயல்படத் தொடங்கியிருப்பதை தோழர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தலைமைக் கழக முகவரி:** 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மைலாப்பூர், சென்னை–600004. (தொலைபேசிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 27th October 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.